215044

செந்தமிழ்

தொகுதி XXXI

Oct Nov 1934

JL
031m211,N03CH
N34.31.12.
215044.

362

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௧] பவ ஐப்பசி [பகுதி-௧௨.
Vol. XXXI. October–November 1934. No. 12.

உள்ளுறை.

பரிசோதனைத்தொடர்:—ஸ்ரீமத். T. N. அப்பனையங்கார் ௨௬௫
வெள்ளிவீதியார்:— ,, வை. சா. வேங்கடராமையர் ௨௭௩
மனுஷ்யத்தன்மை:— ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரிகள் B.A., B.L. ௨௮௩
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 33-ஆம் வருடக்கொண்டாட்ட வரவேற்பும் மங்களவாழ்த்தும்:— ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளை. T. K. இராமாநுஜையங்கார்.
செந்தமிழ் 31-ம் தொகுதியின் உள்ளுரை முதலியன:—
கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர். 49–64
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவு செலவு கணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
ளிநாடுகளுக்கு ரூ 4—8—0

1934.

athu R. Shanmuga Rajeswara
Sethupathy Avergal. and
Thiru. Narayana Iyengar at the
wer Press, No. 54, New Jail Road, Madura.

215644

உ

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

உ

## "செந்தமிழ்" நேயர்களுக்கு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற முப்பத்தொருவருடகாலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகையானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோருமுணர வெளியிடும்பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங் கொண்டே இப்பகுதியோடு முப்பத்தோராந்தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, முப்பத்திரண்டாந்தொகுதி தொடங்கப்பெற்று அதன் முதற்பகுதி கூடியசீக்கிரம் வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. யில் அனுப்பப்பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன்பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்துவரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

N. B.—முப்பத்திரண்டாந்தொகுதிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவிரும்புவோர் அவ் விவரத்தை உரியகாலத்தில் அடியிற் கையொப்பமிட்டிருப்பவர்க்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளலாயிற்று. இங்ஙனம் தெரிவிப்பதனால், அனாவசியமான வி. பி. செலவு சங்கத்துக்கு ஏற்படாது.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௧] பவ௵ ஐப்பசி௴ [பகுதி-௧௨.

Vol. XXXI. October-November 1934. No. 12.

## பரிசோதனத் தொடர்.

(சொல்-இளம்பூரணம்.)

இதற்குமுன் இச்செந்தமிழில் பரிசோதனத்தொடர் என்னும் பெயரால் வெளிவந்த கட்டுரைகள் பல. அவை மிக்க பயனளிப்பன வென்று அறிஞர்கள் பாராட்டினர். அவற்றின் முறையைப் பின்பற்றி இப்பொழுது தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணருரை பரி சோதிக்கப்படுகிறது. இதன்கண்ணும் பிழைகள் உளவாயின் அவற்றை அறிவுடையோர் திருத்தியளிக்கவேண்டுகின்றேன்.

பரிசோதனம் 1. (கிளவியாக்கம் 16.) "செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக், கப்பொருளாகும் உறழ்துணைப் பொருளே;" என்பது சூத்திரம். செப்புமிடத்தும் வினாவுமிடத்தும் சினையொடு சினையே பொருஉக, முதலொடுமுதலே பொருஉக என்று இளம்பூரணர் இதற்குப் பொருளுரைத்தார். கொற்றன் மயிர் நல்லவோ? சாத்தன் மயிர் நல்லவோ? என்று சினைபற்றி வினாவினவிடத்து, கொற்றன்மயிர் (அல்லது) சாத்தன்மயிர் நல்ல என்று சினைபற்றியே விடையிறுக்க; கொற்றன் நல்லனோ? சாத்தன் நல்லனோ? என்று முதல்பற்றி வினாவினவிடத்து, கொற்றன் (அல்லது) சாத்தன் நல்லன் என்று முதல்பற்றியே விடையிறுக்க: என்பது கருத்து. அவ்வாறு பொருவுங்கால் ஒரு சினைக்கு மற்றொருசினையும் ஒரு முதலுக்கு மற்றொருமுதலுமாகாது, அவ்வப்பொருளே பொருவவேண்டும் என்றும் உரையாசிரியர் கூறினார்.

இப்பொருளெல்லாம் உரைத்த பிறகு, "இனி, சினை முதற் கூறிய முறையேயன்றிக் கூற்றினுன் முதலுஞ் சினையும் உறழ்ந்து வருவனவும் உள, குணமருங்குபற்றி. வரலாறு: இம் மகள்கண் நல்லவோ? கயல் நல்லவோ? என்பது போல்வன" என்ற இப்பகுதி இங்ஙனமே இளம்பூரணருரை அச்சுப்புத்தகத்திற் பதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாக்கியத்திற் பொருட்பேறின்று. இது பிழைபட்ட பாடமென்று உணரத் தக்கது.

ஆகையால் என்னிடமுள்ள மிகப்பழைய பிரதியொன்றில் இவ்வாக்கியத்தை ஒப்பு நோக்க நேர்ந்தது. அதில், "இனி சினை முதற்கூறிய முறையன்றிக்கூற்றினுன் முதலுஞ் சினையு முறழ்ந்துவருவனவு முள குணமருங்குபற்றி" என்று தெளிவாக எழுதப்பட்டு, உதாரணமுங் காட்டப்பட்டுள்ளது. இதில், பொருட்பொருத்தமிருப்பதால் இதுவே சுத்தபாடமென்று கொள்ளத்தக்கது.

சூத்திரத்தில் 'முதல் சினை' என்று முறைமையிற் கூறுது 'சினை முதல்' என முறைபிறழக்கூறிய கூற்றிற்கு ஒரு பயனுரைக்கக்கருதி இளம்பூரணர் இவ் விசேடவுரை வரைந்தனரென்று விளங்குகிறது. ஆகவே பிழைப்பாடம், 'முறையன்றிக்கூற்று' என்னுந் தொடர்மொழியைக் கூட்டிவாசித்துப் பொருளுணர்ச்சிகொள்ளமாட்டாத ஏடெழுதுவோர்குறையினுல் நேர்ந்திருக்கலாமென்று தோன்றுகின்றது. இது நிற்க.

மேல்வாக்கியத்திலுள்ள 'குணமருங்குபற்றி' என்பதற்கு, 'குற்றமில்லாதவிடத்தில்' என்று பொருள். முதலும் சினையும் உறழ்ந்து வருங்கால் கண் நல்லவோ? கயல் நல்லவோ? என்பதுபோலக் குணம்பட வருமாயின் அவ்விடத்துக் குற்றமாகாதென்பதாம்.

பரிசோதனம் 2. (கிளவியாக்கம். 33) "இனைத்தென வறிந்த சினை முதற் கிளவிக்கு, வினைப்படு தொகையி னும்மை வேண்டும்;" என்பது சூத்திரம். இத்துணையென்று வரையறுக்கப்பட்ட சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும் வினைப்படுத்துச்சொல்லுமிடத்து இறுதி உம்மை கொடுத்துச் சொல்லுக என்று இதற்குப் பொருளுரைத்து, 'நம்பிகண்ணிரண்டும் நொந்தன' 'தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்' என்பன போன்ற உதாரணமுங்காட்டினர் உரையாசிரியர். அன்றியும் அவர்,



'இருதிணைமருங்கினைம்பாலுமறிய' என்னுது, "இருதிணைமருங்கினைம் பாலறிய" (கிளவி. 10) என்று ஆசிரியர் தொல்காப்பியர் சூத்திரஞ் செய்தது, செய்யுட்கண் உம்மையின்றிவருதற்கு உடம்பொடுபுணர்த்ததாம் என்று விசேடவுரை கூறினர்.

இப்பொருளின்பின்னர், "இனிச் சூத்திரத்திற் சினைமுதற்கூறிய முறையன்றிக் கூற்றினுள் உம்மையின்றி வருவனவும் உள என்பதுபற்றி உம்மையைத் தொகுத்துக்கூறினுன் என்பாரும் உளர்;" என்ற வாக்கியம் அச்சுப்பிரதியிற் காணப்படுகின்றது. இது பழைய பிரதியில், "இனிச் சினை முதற்கூறிய முறையன்றிக்கூற்றினுன் உம்மையின்றி வருவனவும் உள என்பது. உம்மையைத் தொகுத்துக் கூறினுன் என்பாரும் உளர்;" என்று தெளிவாய் இரண்டுவாக்கியமாக எழுதப்பட்டுள்ளது. அச்சுப்பிரதியின் பாடத்தினும் பழைய சுவடியின் பாடமே சிறந்தது.

சூத்திரத்தில் 'சினைமுதற்கிளவி' என முறைபிறழக் கூறிய கூற்றினுற் பெறப்படும் பொருளை இவ்வுரைப்பகுதி விளக்குகின்றது. ஆகையால், கூற்றினுள் என்றிருப்பதை விடுத்துக் கூற்றினுன் என்றிருப்பதைக்கொள்வது திருத்தமுடையதாம். இத்திருத்தம் 'தொல்காப்பியச் சொல்லதிகாரக்குறிப்பு' என்னும் புத்தகத்தில் அதன் ஆசிரியராலும் உய்த்துணர்ந்து கூறப்பட்டுள்ளது. ஆயினும் அஃது அவ்வாறே பழம் பிரதியிற் பிழையின்றிக் காணப்படுதல் இங்குக் குறிக்கத்தகுவதே. ஏட்டுச்சுவடியில் 'னுன்' 'னுள்' என்னுமெழுத்துக்கள் பெரும்பாலும் உருவொத்துத்தோன்றுமாகையால் படிப்போரின் கவனக்குறைவால் இவ்வழு நேர்ந்துவிட்டதென்று தெரிகிறது.

இனி, "உம்மையின்றிவருவனவும் உள என்பதுபற்றி உம்மையைத் தொகுத்துக்கூறினுன் என்பாரும் உளர்" என்ற வாக்கியப்பகுதியும் பொருளுணர்த்துவதிற் சிறிது இடர்ப்பாடுடையதாம். இதில், "என்பது பற்றி....தொகுத்துக்கூறினுன்" என இயைக்க இயலாது. ஏனெனில், இச்சூத்திரத்தில் உம்மையின்றிவருவனவும் உள என்று பெறப்படுவது, வேறொருசூத்திரத்தில் ஆசிரியர் உம்மையின்றிக்கூறியதற்கு எவ்வாற்றானும் காரணமாகமாட்டாது. ஆகையால், "என்பதுபற்றி....என்பாரும் உளர்" என்றே இயைத்து நலிந்து பொருள்கொள்ளவேண்டும். அங்ஙனங் கொண்டாலும் அப்பொருள் சிறந்துகாட்டவில்லை,

பழஞ்சுவடியிற்காணும் பாடத்தை ஏற்றுக்கொண்டால், அதுமிகச் சிறந்தபொருளைத் தருகிறது. அதன்படி 'முறையன்றிக் கூறினான் உம்மையின்றிவருவனவும் உள என்பது' என்னுமளவோடு முன்வாக்கியம் முற்றிவிடும். 'உம்மையைத் தொகுத்துக்கூறினான் என்பாரும் உளர்' என்பது மற்றொரு தனிவாக்கியமாய்ப் பிரிந்து நிற்கும். இவ்விரு பகுதி வாக்கியங்களுக்கும் தனித்தனி இரண்டுபயன் உண்டு.

முந்தினவாக்கியம், இனைத்தென அறிந்த கிளவி உம்மையின்றி வருதற்கு, சொல்லிலக்கணநெறியானே அமைதிகூறுகின்றது. பிந்தின வாக்கியம், அதற்குச் செய்யுளிலக்கணநெறியானே அமைதிகூறுகின்றது. இச்சூத்திரத்தில், 'சினைமுதற்கிளவி' என்ற முறையன்றிக்கூற்றினால் உம்மையின்றிவருதல் பெறப்படும் என்பது முதல்வாக்கியத்தின் பொருள். 'தொகுக்கும்வழித் தொகுத்தல்' என்னும் செய்யுள்விகார வகையால் அது கொள்ளப்படும் என்பது இரண்டாம்வாக்கியத்தின் பொருள். எனவே, இவ்விருவாக்கியங்களும் தனித்தனி வேறுவேறான கோட்பாடுகளை விளக்குவனவாம்.

பிந்தினவாக்கியத்தில், உம்மையைத் தொகுத்துக்கூறினான் என்பதற்கு, 'தொகுத்தல் விகாரம்' என்னும் இலக்கணத்தாற் கூறினான் என்பது பொருள். அது செய்யுளுக்கே உரியது. "இருதோள் தோழர் பற்ற" என்பதுபோன்ற இலக்கியங்கள் செய்யுள்விகாரமென்றே அமைவு கூறினர் சேனாவரையரும். ஆகையால் அத்தகைய ஒருசார் ஆசிரியர் கொள்கையையே, இளம்பூரணர், "உம்மையைத் தொகுத்துக் கூறினான் என்பாரும் உளர்" என்று சுருக்கச்சொல்லி விளக்கவைத்தமை தெளிவாகிறது. இதனை எளிதினறிய இயலாமல் யாரேனும் ஒருவர், ஏதோவொரு காரணகாரியத் தொடர்புதோன்ற, இருவாக்கியங்களையும் ஒன்றுசேர்த்துவிட்டனரோ? என்ற ஐயம் உண்டாகின்றது. ஆகையால், "....சினைமுதற்கூறிய முறையன்றிக் கூற்றினான் உம்மையின்றிவருவனவும் உள என்பதுபற்றி, உம்மையைத் தொகுத்துக் கூறினான் என்பாரும் உளர்" என்ற அச்சுப்பிரதியின் பாடம் பிழையுடையதேபோலும்.

பரிசோதனம் 3. (கிளவியாக்கம் 37.) "பொருளொடு புணராச் சுட்டுப் பெயராயினும், பொருள் வேறுபடா தொன்றாகும்மே" என்பது சூத்திரம். பொருளொடுபுணராதுநின்ற சுட்டுப்பெயராமேயெனினும்



அப்பொருட்கு இயைபுபடவருமே எனின் அமையும் என்பது இதன் உரை. 'இவையல்லது பயறில்லை' என்பதில் இவை என்னுஞ் சுட்டுப் பெயர் பொருளொடுபுணராதது; ஆயினும் அது பொருட்கு இயைபுடையது; ஆகையால் அமையும்: என்பது உரையாசிரியர் கருத்து.

இச்சூத்திரத்தின் உரைக்குப்பின்னர், "இவையல்லது பயறில்லை என்புழிப் 'பயறு' என்னுஞ்சொல்லாற்பயன் உணரப்பட்டது; 'அல்லது' என்னுஞ் சொல்லே எதிர்மறுத்துநின்றது; 'இல்லை' என்னுஞ் சொல்லான் இன்மை உணரப்பட்டது:" என்ற வாக்கியங்கள் இங்குள்ளவாறே அச்சுப்புத்தகத்திற் பதிக்கப்பட்டுள்ளன.

இவையல்லது பயறில்லை என்பதில் ஒவ்வொருசொல்லும் ஒவ்வொருபொருளைக் குறிக்க, 'இவை' என்னுஞ்சொல் மாத்திரம் தனியே பொருள்குறியாதுநிற்பதை ஒருவாறு விளக்குதல் இவ்வாக்கியங்களின் நோக்கமாம். இக்கருத்து; "இனி இவையென்னுஞ்சொல் பொருளின்றால், அஃது என்செய்யுமென்றார்க்கு, அதுவும் பயற்றினையே சுட்டிற்றாகலான் அமைக என்பது கருத்து" என மேல்வரும் உரைப்பகுதியானும் வலியுறும்.

ஆகவே, "பயறென்னுஞ்சொல்லாற் பயன் உணரப்பட்டது" என்று அச்சுப்பிரதியிற் கண்ட பாடம் பொருளொடுபொருந்தவில்லை. அது, பழையபிரதியில், பயறென்னுஞ்சொல்லாற் பயறுணரப்பட்டது என்று திருத்தமாக விளங்குகின்றது. எழுத்தொருவொத்தலால், வல்லின றகாரவுகாரத்தை னகாரவுகரமாகக் கருதி ஏடுவாசிப்போர் செய்த தவறு இது. 'பயறுணரப்பட்டது' என்பதை 'பயனுணரப்பட்டது' என்று படித்துக்கொண்டு, பின்னும் அதனைச் சந்திபிரித்து, 'பயன் உணரப்பட்டது' என்று படியெடுத்ததால் இப் பிழைப்பாடம் நேர்ந்துவிட்டது.

பரிசோதனம் 4. (கிளவியாக்கம் 41.) "சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும், இயற்பெயர்க்கிளவி முற்படக்கிளவார்" என்பது சூத்திரம். இதன் பொருள்;—சிறப்புப்பெயரும் இயற்பெயரும் ஒருவருக்கு உளவாயின் அவரைப் பெயர்வழங்குங்கால் சிறப்புப்பெயரை முற்கூறி இயற்பெயரைப் பிற்கூறுக என்பதாம். 'ஏனாதி நல்லுதடன்' என்பது

போல்வன இதற்கு உதாரணம். இதனுள் ஏனாதி-சிறப்புப்பெயர்; நல்லுதடன் - இயற்பெயர்.

இதன் உரைத்தொடக்கத்தில், இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின்; இதுவும் ஒருபொருண்மேல் இருபெயர்வழுக் காத்ததுநுதலிற்று என்றவாக்கியம் அச்சுப் புத்தகத்தில் உள்ளது. அது பழைய பிரதியில், "இதுவும் ஒருபொருண்மேல் இருபெயர் வழுக் காத்தது." என்ற அளவில் முற்றி நிற்கின்றது. இதுவே திருத்தமுடையது. காத்ததுநுதலிற்று என்பது இனிதினியையாது. காத்தல்நுதலிற்று என்றேனும் இருக்கவேண்டும். இதுகிடக்க.

இச்சூத்திர வுரைக்குப்பின், "வ ர ல ா று: ஏனாதி நல்லுதடன்; சோழன் நலங்கிள்ளி எனவரும்" என்று அச்சிடப்பட்டுள்ளது. சிறப்புப்பெயரை முற்கூறி இயற்பெயரைப் பிற்கூறியதற்கு ஏனாதி நல்லுதடன் என்பது எடுத்துக்காட்டாகும்; சோழன் நலங்கிள்ளி என்பதாகாது. ஏனெனில் சோழன் என்பது சிறப்புப்பெயரன்று. உரையாசிரியர் இளம்பூரணர் தாமே, "சிறப்புப்பெயரென்பன சிறப்புடைய மன்னராற் பெறுவன" என்று விவரித்திருக்கிறார். ஆகையால் அவ்விடத்தில் அவ்வுதாரணத்தை அவர் காட்டியிருக்க இயலாது. பழைய சுவடியிலும் இது தவறாகவே எழுதப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மூலமான ஏட்டுப்பிரதியை எழுதினோர்யாரோ அதனைப் பிறழ்ச்சிவகையால் அவ்விடத்துச் செருகிவிட்டனர்போலும். ஏனாதி நல்லுதடன் என்பதனோடு மற்றுமோர் உதாரணம் உரையாசிரியர் காட்டியிருக்கக் கூடுமாயின், அது சேனாவரையர் காட்டிய 'காவிதி கண்ணந்தை' போன்றதாக இருத்தல் வேண்டும். இது நிற்க.

சூத்திரத்திலுள்ள, "சிறப்பினாகிய பெயர்நிலைக்கிளவிக்கும்" என்ற உம்மையின் பொருளை இளம்பூரணர் விரித்துரைக்கின்ற பகுதியும் குற்றங்குறைகளுடன் காணப்படுகிறது. அப்பகுதிபற்றி இதுவரை யானறிந்த அளவில் மூன்று பிரதிபேதம் உள்ளன. அவை வருமாறு:—

(1) "உம்மையாற் பிறப்பினாகிய பெயர்க்கும், தொழிலினாகிய பெயர்க்கும், கல்வியினாகியபெயர்க்கும் இயற்பெயர்களை வழிபவைத்துச் சொல்லுக. வரலாறு: பார்ப்பான் கண்ணன்; வண்ணான் சாத்தன்; எனவரும். கல்வியினாகியகாரணம் வந்தவழிக் கண்டுகொள்க."

—அச்சுப்பிரதியின் பாடம்.

(2) "உம்மையால் உறுப்பினாகிய பெயர்க்கும், கல்வியினாகிய பெயர்க்கும் கொள்க. உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க."

—கீழ்க்குறிப்பிற்கண்ட வேறுபிரதியின்பாடம்.

(2) "உம்மையாற் பிறப்பினாகிய பெயர்க்கும் கல்வியினாகிய காரணம் வந்தவழிக் கண்டுகொள்க."

—அச்சுக்குவாராத பழையபிரதியின் பாடம்.

இங்ஙனம் ஓரொருபிரதியில் ஓரொருவகையாக எழுதப்பட்டிருப்பதே இவ்வுரைப்பகுதி சிதைந்தும் பிறழ்ந்தும் இருப்பதை நன்கு விளக்கும். ஆகையால் இம் மூவகைப் பாடங்களையும் ஒன்றுசேர்த்து, இவ்வுரையின் முதற்பகுதியில் சோழன் நலங்கிள்ளி என்று உதாரணங் காட்டியிருப்பதையும் அவற்றோடு கூட்டி ஆராய்ந்தால் இவ்விடத்து இளம்பூரணரெழுதியவுரையின் உண்மைப்பாடத்தை ஒருவகையாக உய்த்துணர்தல் கூடும்.

'சோழன் நலங்கிள்ளி' என்பது குடியினாகிய பெயர்ப்பின் இயற்பெயர் வந்ததற்கு உதாரணமாகையால், இங்கு உம்மையாற் கொள்ளப்பட்டபெயர்களில் அதுவும் ஒன்றாயிருக்கவேண்டுமென்று தெரிகிறது. 'கல்வியினாகிய காரணம் வந்தவழிக்கண்டுகொள்க' என்னும் வாக்கியத்திற் பொருட்பேறின்மையால், அது 'கல்வியினாகியபெயர்க்கும் உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க' என்று ஆதியில் உரையாசிரியர் எழுதியிருந்ததொரு வாக்கியத்தின் சிதைவாயிருக்கவேண்டுமென்று விளங்குகிறது. 'கல்வியினாகிய' என்பதன்பின்னர் 'பெயர்க்கும் உ' என்பது வரையுள்ள எழுத்துக்கள் ஏடெழுதுவோர் பராக்கினாலோ வேறுகாரணத்தினாலோ விடுபட்டிருக்கலாம்; அப்பொழுது அதன்மேலுள்ள 'தாரணம்' என்பதைக் 'காரணம்' என்று படித்துக்கொண்டு பொருளுணர்ச்சிகருதாது எவரோ ஒருவர் வாக்கியத்தை எழுதிமுடித்த குற்றத்தால் பிழைப்பாடம் நேர்ந்தது; என்று கொள்ள இடமுண்டு.

ஆகவே இங்ஙனம் ஆராய்ந்துகண்ட அவ்வுரைப்பகுதியின் உண்மைப்பாடம் வருமாறு:—

"உம்மையாற் குடியினாகிய பெயர்க்கும், பிறப்பினாகிய பெயர்க்கும், தொழிலினாகிய பெயர்க்கும், உறுப்பினாகிய பெயர்க்கும், கல்வியினாகிய பெயர்க்கும் இயற்பெயர்களை வழியேவைத்துச் சொல்லுக என்பது. வரலாறு: சோழன் நலங்கிள்ளி; பார்ப்பான்கண்ணன்; வண்ணான் சாத்தன்; எனவரும், உறுப்பினாகிய பெயர்க்கும் கல்வியினாகிய பெயர்க்கும் உதாரணம் வந்தவழிக்கண்டுகொள்க"— என்பதாம். இவ்வாராய்ச்சி முடிபு அறிஞர்க்கு உடன்பாடாயின் அச்சுப்புத்தகத்தின் பாடத்தை இங்ஙனமே திருத்தமாக மாற்றிக்கொண்டு விடலாம். இது நிற்க.

உறுப்பினாகிய பெயரும் கல்வியினாகிய பெயரும் அக்காலத்து மிகுதியாகப் பயிலாமல் அருகியிருந்தமைதோன்ற, அவற்றை வந்தவழிக் கண்டுகொள்க என்று உரையாசிரியர் விடுத்தனரென்று கொள்ளவேண்டும். அல்லது மாணாக்கர்க்கு உய்த்துணர்வுபெருக்கல்வேண்டி அவர் அங்ஙனம் செய்தனரென்றுகொள்வதும் சாலும். ஆகவே, 'அவை அவர்க்கு ஐயப்பாட்டிற்கிடனாயிருந்தன' வென்று அச்சுப்புத்தகத்தின். பதிப்பாசிரியர் முன்னுரையிற் குறிப்பெழுதியிருப்பது வேண்டுவதின்று சேனாவரையர்காட்டியவாறே, குருடன் கொற்றன்; தெய்வப்புலவன் திருவள்ளுவன் என்பன முறையே அவற்றிற்கு உதாரணமாகும். இளம்பூரணர் இவற்றை அறியாதவரல்லர்.

[தொடரும்.]

T. N. அப்பனையங்கார்,

மதுரை.

---

உ

கடவுள் துணை.

# வெள்ளிவீதியார்.*

கற்பிற் சிறந்தவெள்ளி வீதியார் கட்டுரைத்த
நற்பாப் பதினான்கி னன்னயமா—ஏற்கமைந்த
அற்ப அறிவி னளந்துரைப்ப தற்கருளும்
தற்பரன் செங்கமலத் தாள்.

## ௧. முன்னுரை.

சங்கமருவிய தொகைநூல்கள், பன்னூறு தண்டமிழ்ச்சான்றோர்கள் பாடிய செந்தமிழ்ப்பாக்களால் தொகுக்கப்பட்டவை. அச்சான்றோர்களுள் பாடினோர்களாகவும், புலவர்பாடும் புகழுடையோர்களாகவும் பல நல்லிசைப்புலமை மெல்லியலார்கள் திகழ்கின்றார்கள். அம்மெல்லியலார்களுள் வெள்ளிவீதியார் என்னும் புலமைசான்றாரும் ஒருவராவர்.

இவர், தமிழ்மூதாட்டியாம் ஔவைப்பிராட்டியாரால்,

"நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திசினால் யானே" (அகம். ௧௪௭)

என்ற வரிகளாலும் ஆசிரியர் உச்சிமேற்புலவர்கொள்நச்சினார்க்கினியரால்

"மக்க ணுதலிய வகனைந் திணையுஞ்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்."

என்ற தொல்காப்பிய அகத்திணையியற் சூத்திர (௧௫) உரையிலே மேலே காட்டிய வெள்ளிவீதியைப்போல என்ற அகநானூற்றுவரிகளின் பொருளைவிரிக்குமுகத்தாலும் சிறப்பிக்கப்பட்டவர்.

---

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 33-ஆம் வருஷோத்ஸவக் கொண்டாட்டத்தில் புலவர்கூட்டத்திலே படிக்கப்பட்டது.

இவர் இயற்றியனவாக நற்றிணையில் மூன்று, குறுந்தொகையில் எட்டு, அகநானூற்றில் இரண்டு, திருவள்ளுவமாலையில் ஒன்று ஆகப் பதினான்குபாக்கள் படிக்கப்படுகின்றன.[1] அவற்றுள், குறிஞ்சித் திணைக்குரியன நான்கு. மருதத்திணையைச்சேர்ந்தன இரண்டு. நெய்தற்றிணைக்குற்றன மூன்று. பாலைத்திணையைப்பற்றியன நான்கு. சிறப்புப்பாயிரம் ஒன்று.

இவர், தலைவனைப் பிரிந்தமைக்காற்றாது வருந்திப்பாடிய பாக்கள் கற்போர்மனத்தைக் கரையச்செய்வன. தம்முடைய பாக்களில் இவர் பெரும்பாலும் தமது வரலாற்றையே குறித்துள்ளார் என்பது சான்றோர் பலரது கருத்தாகும். இவருடைய பாக்களில் பண்டைத்தமிழ் நாட்டு வரலாறுகளுட் சிலவும் குறிக்கப்பட்டுள்ளன. பாக்கள் பல நயங்களும் பொருந்தியன.

## ௨. ஊரும் பெயரும்.

இவர் இயற்றிய பாக்களால் இவரது ஊரும் பெயரும் இன்ன என்று துணிந்துரைக்கக்கூடவில்லை; பிறநூல்களாலும் அறிந்துரைத்தற் கியலவில்லை. எனினும், இவர், தமது அகப்பாட்டு (௪௫) ஒன்றில் சேர, சோழநாடுகளில் நிகழ்ந்த வரலாறுகளைக் கூறுகின்றமையாலும், அவ்விருநாடுகளிலும் பெரிதும் தொடர்புபூண்ட ஔவையாரால் சிறப்பிக்கப்படுகின்றமையாலும் இவர், அவற்றுள் ஒன்றைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவராயிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டாகிறது.[2]

---

[1] நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பிய அகத்திணையியற் சூத்திர (௧௫) உரையிலே "வெள்ளிவீதியார்பாட்டு" என்று குறிப்பிடும்,

"கன்று முண்ணாது........கவினே"

என்ற குறுந்தொகைப்பா (௨௭) அச்சுப்பிரதியிலே கொல்லனழிசி பாடியதாகப் பதிக்கப்பட்டுள்ளது.

[2] "மதுரையில் வெள்ளியம்பலத்தெருவிலிருந்ததனால் இப்பெயர் பெற்றார் போலும். இயற்பெயர் புலப்படவில்லை." என்று இவரைப்பற்றித் தாம் எழுதிய குறிப்பில் (நற்றிணை. பாடினோர் வரலாறு. பக்கம் ௭௧.) ஆசிரியர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் வரைந்துள்ளார்கள்.



## ௩. சமயமும் மரபும்.

"செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
இதற்குரிய ரல்லாதா ரில்"

என்பது இவர் இயற்றிய திருவள்ளுவமாலை (௨௬) வெண்பா. இதில் இம்மெல்லியலார் வேதத்தை மக்களால் ஆக்கப்படாத சிறப்புடையதெனப்பொருள்படும் "செய்யாமொழி" என்ற தொடரால் குறிப்பிடுகிறார்; "செய்யா அதற்குரிய ரந்தணரே" என்றும், "ஆராயின் ஏனை இதற்குரியர் அல்லாதார் இல்" என்றும் கூறுமாற்றால், வேதத்தை ஓதுதலும் உரிமையைப் பெற்றிராத தமக்கும் தம்போன்றார்க்கும் உபகாரமாக, அதற்குச்சமமான, தம்மால் பொய்யாமொழி எனச்சிறப்பிக்கப் பெற்ற, திருக்குறள் கிடைத்த பெருமகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார். இவற்றால் இவர் வேதவழக்கொடுபட்ட கொள்கையினை உடையவர் என்பதும், வருணப்பாகுபாட்டை ஒத்துக்கொண்டவர் என்பதும் அறியப்படும்.

## ௪. கற்பு.

"உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந்தன்று"

(பொருள், ௨௨)

என்பர் ஒல்காப்பெருமைத் தொல்காப்பியனார். இம்மெல்லியலாருடைய பாக்கள் இவரது கற்புமேம்பாட்டை இனிது விளக்குவன. இவர், தமது ஆருயிர்த்தலைவனைப் பிரியநேர்ந்தகாலத்துத் தனித்து உயிர்வாழ ஆற்றாராய் அவனைக் காணவேண்டிக் காடுமேடுகளிலும் நடந்து பெரிதும் வருந்துவாராயினர். இவருடைய பாக்களால் இவர் தமது தலைவன்பால் வைத்துள்ள அன்பின் பெருக்கை இத்துணைத்தென அறிந்துகொள்ளலாகும்.

“அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறைத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைநில் லாதே” (குறு. ௧௪௯)

இஃது, உடன்போக்குணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியது.

“அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போ ரிருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களோ
டின்றுபெரி தென்னு மாங்கண தவையே” (குறு. ௧௪௬)

இது ‘வரைவு மறுப்பவோ’ எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது.

“சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டின்
தெற்றென விறீஇயரோ வையமற்றியாம்
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோல்
எமக்குப் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே” (குறு. ௧௬௯)

இது, கற்புக்காலத்துத் தெளிவிடை விலங்கியது.

“அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
தகாஅன் போலத் தான்றீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே” (குறு. ௨௬)

இது, தோழி அறத்தொடு நின்றது.



“எல்லிற் றென்றன் வென்வே லேந்தி
நசைதர வந்த நன்ன ராளன்
நெஞ்சுபழு தாக வறுவியன் பெயரின்
இன்றிப் பொழுதும் யான்வா ழலனே” (அகம். ௩௬௨)

இஃது இரவுக்குறி.

இப்பாக்களின் கருத்துக்களையும், நயங்களையும் ஆராய்வார்க்கு இந்நல்லிசைப்புலமைமெல்லியலாரின் கற்புமேம்பாடு இனிது புலனும்.

## ௫. வரலாற்றுக் குறிப்பு.

“அலரே, அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுத றுமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரியர்
இன்னிசை யார்ப்பினும் பெரிதே.” (அகம் ௪௫)

என்ற வரிகளால் இவர், அன்னி என்னும் சிற்றரசன், சோழநாட்டுக் குறுக்கையிலிருந்த திருவழுந்தூர்த் திதியனுக்குரிய காவன்மரமாகிய புன்னையை வெட்டிவீழ்த்தியகதையினைக் குறிப்பிடுகிறார்.

“யானே, காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்
தாதி மந்தி போலப் பேதுற்
றலந்தனெ னுழல்வென்” (அகம். ௪௫)

என்ற வரிகள் காதலனைக் காவிரிகொள்ள வருந்திய ஆதிமந்தியின் கதையைக் குறிப்பிடுகின்றன.

“பொலந்தார்க், கடல்கால் கிளர்ந்த வென்றி நல்வேல்
வான வரம்ப னடன்முனை” (அகம். ௪௫)

என்ற வரிகள், சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவனது போர்ச் செய்தியைக் கூறுகின்றன.

## ௬. பாக்களின்சிறப்பு

இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியதாக வரும் பாட்டு இவர்மாட்டுள்ள அன்பின் இயல்பை அறிவிக்கின்றது.

"காலே பரிதப் பினவென் கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பலரே" (குறு-சச)

என்பதில் பயின்றுவரும் "கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந் தனவே" என்ற பகுதி அறிந்து இன்புறத்தக்கது. "வாளற்றுப் புற்கென்ற கண்ணும்" (கஉசக) என்ற திருக்குறட்பகுதியும் சேர ஆராயத்தக்கது.

பிரிவிடை அழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியதாகவுள்ள,

"நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டி னாட்டி னூரி னூரில்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரு முளரோநங் காத லோரே." (குறு-ககூ0)

என்ற பா, தொடங்கிய தொழிலை நிறைவேற்றுவதில் இவருக்கிருந்த போற்றலைப்புலப்படுத்துவதுடன் கற்போர்க்கு நகைச்சுவையினை விளைவிப்பதாகவும் அமைந்திருக்கின்றது.

இவரது நாரைவிடுதூது நன்றிமறத்தல் தீயது என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றது.

"சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
எம்மூர் வந்தெம் மொண்டுறைத் துழைஇச்
சினைக்கெளிற் றார்கையை யவரூர்ப் பெயர்தி
அனையவன் பினையோ பெருமற வியையோ
ஆங்கட் டீம்புன லீங்கட் பரக்கும்
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே" (நற்-எ0)

"திங்களுந் திகழ்வா னேர்தரு மிளநீர்ப்
பொங்குதிரைப் புணரியும் பாடோ வாதே
ஒலிசிறந் தோதமும் பெயரு மலிபுனல்
பல்பூங் கானன் முன்னிலைத் தாழை



சோறுசொரி குடவயிற் கூம்புமுகை யவிழ
வளிபரந் தூட்டும் விளிவி னாற்றமொடு
மையிரும் பனைமிசைப் பைதல வுயவும்
அன்றிலு மென்புற நரலு மன்றி
விரல்கவர்ந் துழந்த கவர்வி னல்யாழ்
யாம முய்யாமை நின்றது
காமம் பெரிதே களைஞரோ விலரே." (நற்-கூகரு)

இது, காமமிக்க கழிபடர்கிளவி மீதூர்ந்து தலைமகள் கூறியது.

"நிலவே, நீனிற விசும்பிற் பல்கதிர் பரப்பிய
பான்மலி கடலிற் பரந்துபட் டன்றே
ஊரே, ஒலிவருஞ் சும்மையொடு மலிதொகு பீண்டிக்
கலிகெழு மறுகின் விழவய ரும்மே
கானே, பூமலர் கஞலிய பொழிலகந் தோறும்
தாமமர் துணையொடு வண்டிமி ரும்மே
யானே, புனையிழை நெகிழ்த்த புலம்புகொ ளவலமொடு
கனையிருங் கங்குலுங் கண்படை யிலனே
அதனால், என்னொடு பொருங்கொலிவ் வுலகம்
உலகமொடு பொருங்கொ லென் னவலமுறு நெஞ்சே"
(நற்-கூசஅ)

இது, வேட்கைபெருகத் தாங்கலளாய் ஆற்றாமைமீதூர்கின்றாள் சொல்லியது.

கற்போர்க்குக் கழிபேருவகையைத் தந்து இன்பம் பயக்கும் இயற்கை நவிற்சி இனிதமைந்த இவ்விரண்டுபாக்களும் பிரிந்தோர் படும் துன்பத்தைப் பெருக்குவனவற்றை ஒருசேர அறிவிப்பனவாய் அமைந்துள்ளமை ஆராயத்தக்கது. இங்கே "பூமலர் கஞலிய பொழிலகந்தோறும்— தாமமர் துணையொடு வண்டிமிரும்மே" என்ற வரிகளின் பொருணயம் உய்த்துணரத்தக்கதாம். இத்தகைய பாக்களை யாத்தற்குரிய ஆற்றலுடையவர் எத்துணைச் சிறந்த அன்பும் நட்பயிற்சியும் உலகியலறிவும் உடையராய் இருத்தல் வேண்டும் என்பதும் கூர்ந்துநோக்கத்தக்கது.

"ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போல" (குறு. ௫௮)

என்ற வரிகள், தானே செய்துகொள்ளவும், பிறரால் செய்வித்துக்கொள்ளவும் இயலாமல் வருந்தும் நிலைமைக்கு உவமையாகின்றன.

"அடன்முனைக் கலங்கிய
உடைமதிலோ ரரண்போல
அஞ்சு வருநோய்" (அகம். ௪௫)

என்ற வரிகள், வருகின்ற இடையூற்றைத் தடுத்துக்கொள்ளும் ஆற்றலற்ற நிலைமைக்கு உவமையாக்கப்பட்டுள்ளன.

"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்" 1 (குறு. ௨௬)

என்றவரிகளால் அறியப்படும் உள்ளுறை ஆழ்ந்த கருத்துடன் திகழ்கின்றது.

"பாம்புடை விடர பனிநீ ரிட்டுத்துறைத்
தேக்கலந் தொழுக யாறுநிறைந் தனவே
வெண்கோட் டியானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வள்ளுகிர் வயப்பிணவு
கடிகொள வழங்கா ராறே யாயிடை
எல்லிற் றென்னுன் வெவ்வே லேந்தி
நசைதர வந்த நன்ன ராளன்

1 "விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்" (ஐங். மஞ். ௭)

என்ற வரிகள் இங்கே ஒப்பு நோக்கத்தக்கன.



நெஞ்சுபழு தாக வறுவியன் பெயரின்
இன்றிப் பொழுதும் யான்வா ழலனே
எவன்கொல் வாழி தோழிநம் மிடைமுலைச்
சுணங்கணி முற்றத் தாரம் போலவும்
சிலம்புநீடு சோலைச் சிதர்தூங்கு நளிர்ப்பின்
இளங்குவெள் ளருவி போலவும்
நலங்கொண் டனவாற் றிங்களங் கதிரே" (அகம். ௧௬௨)

இஃது இரவுக்குறிச்சிறைப்புறமாகத் தோழிசொல்லியது. இதிற் குறிப்பிடும் ஆற்றினேதமும் இடையூறும் அறிந்து மகிழத்தக்கன. இங்கே குறிக்கப்படாத வேறு பலசுவைகளும் அறிஞர்களுக்கு விளங்கும் என்பது மிகையாகாது.

"இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்று" (குறு-௫௮)

இவ்வரிகள்

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு" (௭௮௪)

என்ற திருக்குறளையும்,

"வெண்மணல் விரிந்த வீததை கானல்
தண்ணந் துறைவன் றணவா னூங்கே
வாலிழை மகளிர் விழவணிக் கூட்டும்
மாலையோ வறிவேன் மன்னே மாலை
நிலம்பரந் தன்ன புன்க ணோடும்
புலம்புடைத் தாகுத லறியேன் யானே." (குறு. ௩௮௬)

என்பது

"மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்" (௧௨௨௬)

"செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை." (௧௧௫௧)

என்ற திருக்குறட்பாக்களையும் நினைப்பூட்டுகின்றன.

## எ. முடிவுரை.

இதுகாறும் குறித்த செய்திகள் இந்த நல்லிசைப்புலமை மெல்லியலாரைப்பற்றி ஓரளவு தொகுத்துக்கூறுவனவாகும். இங்கே கூறப்பட்ட அனைத்தும் அம்மெல்லியலார் இயற்றியருளிய பாக்களின் துணைகொண்டே வரையப்பட்டன. ஆராய்ச்சிவல்ல பெரியோர் இதனை இன்னும் விரித்தும் விளக்கியும் எழுதலாகும். இங்கே கூறியுள்ளவற்றின் தவறுகளைத் திருத்தியும், அறியாமையால் தொகுத்துக்கூற இயலாதொழிந்த இன்றியமையாச் செய்திகளைச் சேர்த்தும் பூர்த்திசெய்தல் கற்றறிந்த சான்றோர் கடமையாம்.

வித்தகப்பா யாத்தவெள்ளி வீதியார் சொற்பொருளால்
எத்துணையு மாற்றலிலா வேழையேன்—மெத்தத்
துணிவுகொடு சொற்றனனால் சொற்புலவி ரேற்றிக்
கணிபெறச்செய் தாண்மி னளித்து.

ஊ. சா. வேங்கடராமன்.
தண்டமிழ்த்தொண்டன்.

---

# * மனுஷ்யத்வம்.

(மக்கட்டன்மை.)

மகா-ள-ள-ஸ்ரீ V. S. இராமஸ்வாமி சாஸ்திரிகள், B.A., B.L. அவர்கள்.

மனிதராய்ப்பிறந்தோர் என்னசெய்யவேண்டுமென்பதை இக்காலத்து மனிதர்களில் பலர் அறியவில்லை. தங்களைப் புண்ணியபுருஷர்களென்று சொல்லிக்கொண்டு திரிகின்ற மனிதர்கள் உலகத்தில் பலர் இருக்கிறார்கள். மறுமைக்காக இம்மையிலேயே புண்ணியத்தைத் தேடிவைத்துக்கொள்வதே மனிதர்களின்நோக்கம் என்று பேச்சளவில் மட்டும் சொல்லிக்கொண்டு செய்கையில் அதை நினைப்பதே இல்லை. மறுமையுண்டென்பதையே சிலர் ஒத்துக்கொள்வதில்லை. மறுமை உண்டென்பதை எல்லாச் சமயவாதிகளும் அங்கீகரிக்கிறார்கள். இவ்வுலகத்திலேயே புண்ணியத்தைத் தேடிக்கொள்வது இன்றியமையாததென்று நினைக்கிறார்கள்.

ஆனால் புண்ணியம் என்பது யாது என்கிற விஷயத்தில் அவர்களுக்குள் கொள்கைவேறுபாடுகள் இருக்கின்றன. கட்குடித்தல் மறுமையில் கேட்டை விளைவிக்குமென ஒருசாராரும், அதுவே நன்மையை விளைவிப்பது என மற்றொருசாராரும் (தேவிபூஜையில் வாமமார்க்கத்தைச்சேர்ந்தவர்கள்) நம்புகிறார்கள். மறுமைக்காகப் புண்ணியத்தைத் தேடிக்கொள்ளுதல் இன்றியமையாதது என்பது உண்மையானால் அந்தப் புண்ணியமென்பது யாது, அதை எவ்வகையால் தேடிக்கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி இதுநாள்வரை யாதொருமுடிவும் ஏற்படவில்லை.

அந்தணர்களிடம் அன்புடைமை, கங்கைநீராட்டு, துளசிமாலையணிதல், ஹரிநாம ஸங்கீர்த்தனம் முதலியவையே புண்ணியகர்மங்களெனப் பலர் மனதில் கொள்ளுகிறார்கள். வேறுசிலர் ஞாயிற்றுக்கிழமைகளிலொரு

---

* இது, சில ஆண்டுகளுக்குமுன் வங்காளதேசத்தில் விளங்கினவரும், வங்கபாஷையிற் சிறந்த பண்டிதரும் கவியுமான ஸ்ரீ பாபு, வங்கிம்சந்திரசடோபாத்தியாயரால் வெளியிடப்பெற்ற வியாஸத்திலிருந்து எடுத்துத் தமிழில் மொழிபெயர்த்தது. “சங்கீதம்” என்றதைப்பற்றிச் சென்ற மாதப்பகுதியில் பிரசுரித்ததும் அந்த மகானுடைய வியாஸத்தின் மொழிபெயர்ப்பேயாம்.

தொழிலும் செய்யாதிருத்தல், கோயிலுக்குச் (Church) சென்று கண்களை மூடிக்கொள்ளுதல், பிறமதங்களில் வெறுப்படைதல் இவைகளே புண்ணியகர்மங்களெனக் கருதுகிறார்கள். அவர்கள் கொள்கைகள் எங்ஙனமிருப்பினும் தானம், தயை, உண்மையுரைத்தல் முதலியவை புண்ணியகர்மங்களென்பது எல்லாச்சமயத்தாராலும் ஒத்துக்கொள்ளப்பட்டதே.

இவைகளே நமது உயிர்வாழ்க்கையின் ஒழுக்கமென்பதை நம்பி அவைகளைக் கடைப்பிடித்தல் மிகவும் நல்லது. பெரும்பாலார் இவைகளை உள்ளன்போடு செய்வதில்லை. உயிர்வாழ்க்கையின் உண்மையான நோக்கம் இன்னதென்று ஆராய்ச்சிசெய்வதில், மனிதர்களுக்குள் இன்றுவரை முடிவுபெறாமலே விவாதிக்கப்பட்டுவருகிறது. எல்லையற்ற சமுத்திரத்தின் மிகவும் ஆழமான நீர்நிலையில் மிக நுண்ணியவான உயிர்வகைகள் வாழ்கின்றன என்று தெரிந்துகொண்டு மனிதர்கள் நூறாயிரம் வருடங்கட்கு முன்னமேயே மனக்கலக்கமுற்றார்கள். ஆனால் நாம் இந்த உலகத்திலிருந்து எதைச் செய்தல்வேண்டுமென்பதைத் துணிவதில் அவர்கள் யாதொருமுயற்சியையும் செய்யவில்லை. தங்களுடையவும் தங்களைச் சார்ந்தவர்களுடையவும் வயிற்றைவளர்ப்பதிலும் ஐம்புல இன்பங்களை ஆரத் துய்ப்பதிலும் மனிதப்பிறப்பு பயனுடையதாவதென்று அவர்கள் நினைத்தார்கள். அவைகளைக் காட்டிலும் உயர்ந்த பயனொன்றிருக்கிறதென்பதை அவர்கள் நினைக்கவேயில்லை. வயிறுவளர்ப்பதைத் தவிர்த்தும் பொருளீட்டலைத் தவிர்த்தும் சிறந்ததொருபயனை யடைய வேண்டுமென்ற முயற்சியைச் செய்யவேண்டுமென்று அவர்கள் நினைக்கவேயில்லை. அவர்கள் கொள்கைப்படி லாபத்தைப்பெறுவதற்கு முதன்மையாயுள்ளவை பொருளும், அதிகாரமும், புகழுமாம். ஆகையால் பொருளும், உயர்ந்த நிலைமையும், புகழுமாகிய இவைகளைத்தேடுதல் இன்றியமையாததென்பதை எல்லாச்சமயிகளும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இம் மூன்றின் சேர்க்கையையே உலகத்தில் செல்வமென்று ஜனங்கள் வழங்குகிறார்கள். இவை மூன்றும் ஒன்றுசேர்வது மிகவும் அரிது. இவைகளில் இரண்டேனும் ஒன்றேனும் இருந்தாலும், அல்லது மிகுதியாகப் பொருள்மட்டுமிருந்தாலும் அதுவே செல்வமென்று எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.



செல்வத்தை விரும்பியே காலத்தைக்கழிப்பதாலும் அதை அடைவதே வாழ்நாளின் நோக்கமென்று நினைப்பதாலும் மக்கட்டொகுதிக்குக் கெடுதியுண்டாகிறது. அதனாலேயே உயர்வு தடைப்படுகிறது. சிறிதளவு பொருளாசை மனிதருக்கு நன்மைசெய்யக்கூடியதே. பொருளில் ஆசை வைப்பதே மிகவும் கெட்டதென்று நாம் கூறவில்லை. ஆனால் பொருள் தேடுவதே பிறப்பின்பயன் என்று நினைப்பதே கேட்டைவிளைப்பதாம். இவ்விதமான எண்ணம் சாதாரண மனிதர்களிடம் மட்டும் இல்லை. சிறந்த பண்டிதர்களிடமும் அரசர்களிடமுங்கூட உள்ளது. பொருள் தேடுதற்குள்ள ஆசையே உயிர்வாழ்க்கைநோக்கத்தின் முன்னேற்றத்துக்குத் தடையாயிருக்கிறதென்று நினைக்கிற பெரியோர்கள், எப்பொழுதாவது எவ்விடத்திலாவது அருகித்தோன்றுகிறார்கள். சாக்கியஸிம்ஹர் (புத்ததேவர்) அரசிபற்செல்வத்தை மறுமைக்குத்தடையாயிருக்கிறதென்று தள்ளிவிட்டார்.

பகவான் புத்தர் உபதேசித்தருளியதாவது:—உலகவியாபாரத்தைச் சித்தத்திற்கொள்ளுவதே கெடுதியைத் தரக்கூடியது; மனிதன் எல்லாவற்றையும் துறந்தவனாய் வீடுபேற்றை விரும்பிக்கொண்டிருத்தல் வேண்டும்; புறம்பான பற்றுக்களை விலக்கிவிட்டவர்களான துறவிகள் பலர் மனிதர்களுக்கு நல்லுபதேசம் செய்துகொண்டிருப்பதை நாம் கண்கூடாகக்காண்கிறோம். இவ்வுலகமானது சுவர்க்கத்தை யடைவதற்காகப் புண்ணியகர்மங்களைச் செய்தற்குரிய இடமேயாகும். பரலோகத்தில் இன்பத்தை விளைவிக்கக்கூடிய செய்கைகளையே நாம் இவ்வுலகத்துச் செய்துவரவேண்டியது இன்றியமையாதது.

முதலாவது:—இக்காரியங்கள் எவை என்பதை நாம் ஆராயவேண்டும். அவற்றுள் கொள்கைவேறுபாடுண்டு. அவைகள் இவை என்று துணிவதற்கும் தக்க சான்றுகளில்லை.

இரண்டாவது:—பரலோகமொன்றிருக்கிறதென்று நிரூபிப்பதற்கும் போதிய சான்றுகளில்லை.

மூன்றாவது:—பரலோகமென்பது உண்மையாயிருந்தாலும் இவ்வுலகம் கேவலம் பரீக்ஷைமாத்திரமாய் இருந்தாலும் இம்மையின்பத்திற்கும் மறுமையின்பத்திற்கும் வேற்றுமை ஏன் தோன்றுகிறதென்பதற்கும் போதுமானவிடை கிடைக்கவில்லை. பரலோகமென்பது உண்மையாயிருக்குமானாலும், அவ்வகையான நற்கர்மங்களால் இவ்வுலகத்திலேயே நன்மைகள் ஏன் கிடைக்கவில்லை என்பதற்குத் தக்ககாரணம் ஒருவராலும் காட்டப்படவில்லை. அறத்தைச் செய்தலால் நன்மைகள் உண்டாகுமென்பது உண்மையானால், அது பரலோகத்தில்மட்டும் நன்மைபயக்கும்; இம்மையில் நன்மைபயவாது என்பது எதனால் காட்டமுடியும்.

கடவுளொருவர் பரலோகத்தில் ஆசனத்திலமர்ந்து நியாயாதிபதியாக விசாரணைசெய்து பாபிகளை நரகக்குழியில்தள்ளிப் புண்ணியம் செய்தவர்களைச் சுவர்க்கத்துக்கு அனுப்பிவைப்பார் என்ற பழங்கதையை அறிவுடைய மனிதன் நம்பமாட்டான். இவ்வுலகில் தீவினைசெய்பவர்களாயிருப்பவர்களும் இன்பமடைகிறார்கள், அறம்புரிவோர்களும் துன்பமடைகிறார்கள் என்பதை நாம் கண்கூடாகக்காண்கிறோம். ஆகையால் பொருள்தேடுதலே நல்லதென்று பலரும் நினைக்கக்கூடும். அவர்கள் உண்மையறியாமையாலேயே அவ்விதமாக நினைக்கிறார்கள். புண்ணியகர்மங்கள் பரலோகத்தில் நன்மையைத்தருவனவாயிருந்தால் இவ்வுலகத்திலும் நன்மையைத் தருவனவாகும். ஆனால், பரலோகத்தில் மாத்திரம் நன்மையைத்தருவதும் இவ்வுலகத்தில் நன்மையைத்தராததுமான புண்ணியகர்மம் யாது? எவ்விதமான மனோவிருத்தியின் பயன் புண்ணியகர்மமோ அவ்விதமான மனோவிருத்தியிலிருந்து இரண்டுலோகங்களிலும் நன்மை விளையும்.

அதிகாரிகளிடத்துத் தங்களுக்குள்ள அச்சத்தினாலோ, அல்லது, புகழைவிரும்பியோ கொடிய பஞ்சகாலத்தில் பஞ்சநிவர்த்திக்காக ஒரு செல்வமுடையான் மனதில் விருப்பமின்றி மிகுந்த பொற்காசுகளைக்



கொடுத்தாலும் அவன் புண்ணியம்செய்கிறவனாவானா? தானம்செய்வது புண்ணியமே; ஆனால், இவ்விதமாக விருப்பமின்றித் தானம்செய்வது புண்ணியமென்று ஒருவரும் ஒத்துக்கொள்ளமாட்டார். எவன் பொருளின்மையால் கொடுக்கமுடியாமல் கொடுப்பதற்குக் கையில் பொருளில்லையே என்று வருந்துகிறானோ அவன் இம்மையிலும் மறுமையிலும் இன்பமடைவானென்பது ஒருதலை. ஆகையால் உள்ளக்கருத்து நல்லதாயிருக்குமானால் பயன் இயல்பாகவே கைகூடும். பரலோகமென்பது இருந்தாலும் இல்லாவிட்டாலும் நல்ல எண்ணமே மனிதனுக்கு இன்றியமையாதது. உள்ளக்கருத்துக்கள் நல்லவையாயிருந்தால் இயல்பாகவே புண்ணியகர்மங்களைச் செய்வதில் முயற்சிப்பான். அவ்விதமாக பலவேறு மனமுயற்சிகள் சேர்ந்து வீண்கார்யங்களில் செல்லுவதில்லை. கேவலம் ஞானமே அவைகளின் கிரியைகளாகும். ஞானத்தையடையக்கூடிய மனோவிருத்திகளைப் பரிசீலனம்செய்வதே மனிதவாழ்க்கையின் நோக்கமாகும்.

இந்த நோக்கத்தையே மனதிற்கொண்டு செல்வம் முதலானவைகளில் வெறுப்புடன் ஒருவன் வாழ்நாளை நடத்துவானானால் அவனுக்கு மறுபிறப்பு உண்டாகமாட்டாது. அவ்விதமான மனிதர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாயிருப்பினும் அவர்களின் ஒழுகலாறே மனிதர்களுக்கு விலைமதிக்கக்கூடாத உரையாணியாயிருக்கிறது. ஜீவனத்தின் உத்தேசசம்பந்தமான இவ்விதமான சிக்ஷையானது வேறோரிடத்திலும் கிடைக்காது. தர்மத்தைப்புகட்டுவதான நீதிசாஸ்திரம், தர்மசாஸ்திரம், விஞ்ஞானம், தர்சனம் முதலான சிக்ஷாசாஸ்திரங்களிலும் நமது துர்ப் பாக்கியத்தால் அவ்விதமான மஹான்களுடைய ஜீவனத்தின் கூடமானதத்துவம்(மறைபொருள்) எளிதில் அறியமுடியாததாக இருக்கிறது. இத்தகைய பெரியோர்கள் தங்களுடைய சரித்திரங்களை எழுதிவைக்கவில்லை என்பது விசனிக்கத்தக்கதே.

---

பவ ஆடி மீ ௩௧உ (15—8—'34.)

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் முப்பத்துமூன்றும்வருஷோத்ஸவத்துக்கு
அக்ராஸநராக விஜயம் செய்த சென்னைக் கவர்னர்
மகா-௱-௱-ஸ்ரீ மகாகனம்பொருந்திய
கான்பகதூர் ஸர் முகம்மது
உஸ்மான்ஸாகிப் பகதூர் K.C.I.E., அவர்களுக்கு
மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் அளித்த

# வரவேற்புப்பத்திரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை ஆசிரியர்
சு. நல்லசிவன்பிள்ளை இயற்றியது.

ஆசிரிய விருத்தம்

பூவேந்தர் புகழ்பாண்டித் துரைப்பேர் பூண்டோன்
பொன்றாத மெய்யினன்மெய்ப் புலமை வாய்ந்தோன்
பாவேந்தர்க் கைந்தருவாய்த் திகழ்ந்து வாழ்ந்தோன்
பாலவனத்தம்புரந்தோன் பரிந்து காத்த
மூவேந்தர் துதிமதுரைத் தமிழ்ச்சங்கத்தின்
முப்பானின் மூன்றாண்டாய் மொழி விழாவைக்
காவேந்து மெழிற்சென்னை யினிதேயாளும்
கவர்னரென வுலகுபுகழ் கனவானை
தரைபுகழ் கான்பகதூர்ஸர் முகம்மதுஸ்மான்
ஸாகிப் பகதூர் கே ஸி ஐ இ என்னும்
உரைபெறு மாட்சிமைசால் இப் பெரியோன் மேன்மை
யுயர்தலைமையினில் நடத்த உளத்தி லெண்ணி
விரைகமழ்முல்லையந்தாரோன் முகவைமன்னன்
வேந்தர்மொழி யுடன்தமிழும் மிகத்தேர்ந் தோன்தோள்
வரைநிகர் சண்முகராஜேச்வரப்பேர்வேந்தன்
மாமதுரைத் தமிழ்ச்சங்கம் வளர்க்கக் காப்போன்.



எண்ணியாங் குயர்தலைமை வகிக்க வேண்ட
இறைமாட்சி பலவினுக்கு மிடையே யீண்டு
நண்ணியே தமிழருமை யறிந்து கல்வி
நலம்பேணத் தலைவனென நயந்து போந்த
அண்ணலே வருக! சென்னைக்கவர்ன ரான
அருளாள வருக! நினதருமைவாய்ந்த
தண்ணியவிவ் வரவுயர்நல் வரவே யாகித்
தமிழெழவனும் தழைக்க நலம் தருக மாதோ.

சென்னைநகர்க் கவர்னருக்கு நகரச் செய்தி
தெரிந்துரைக்குஞ் சிலனெனத் தெளிந்து நின்னை
மன்னர்மதித் தப்பதவி வழங்கப் பெற்றாய்
மற்றுமந்தக் கவர்னருட னிருந்து வாய்மை
மன்னுமந்த்ரா லோசனைசெய் பதவிபெற்றாய்
மகிழ்வொடுபின் கவர்னரெனும் மாண்பும் பெற்றாய்
இன்னுமுயர் பதவிபெற்று நீடு வாழ
எல்லாம்வல்லவன் றிருத்தா ளிறைஞ்சு வாமே.

முப்பான் மூன்றாஞ் சங்கவிழா
முதல்வ னெனவந் திவணுறையும்
தப்பா வாய்மை முகம்மதுஸ்மான்
ஸாஹிப் பகதூரெனும்கவர்னர்
இப்பார் புகழ வாழ்க! சங்கம்
இனிது வாழ்க! சபை வாழ்க!
ஒப்பா ரில்லா முகவையர்கோ
வுவந்தெந் நாளும் வாழியவே.

**சக்கரவர்த்தி வாழ்த்து.**

நேரிசைவெண்பா.

தன்னாணை யாலுலகந் தாங்கும் ஐந்தாம்ஜார்ஜெனுநம்
மன்னருஞ் சக்ரவர்த்தி வாழ்கவே!—எந்நாளும்
அன்னவன்செங் கோலும் அவன்கீழ்க் குடிகளும் நீள்
இந்நிலத்தில் வாழ்க இனிது.

---

பவ ௵ ஆடி ௴ ௩௰௧ (15—8—'34.) நிகழ்ந்த

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் முப்பத்துமூன்றாம்வருஷோத்ஸவ மங்களவாழ்த்து.

செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர்

T. K. இராமாநுஜையங்கார் இயற்றியது.

புத்தமுதின் சுவையுணரும் பொன்னாட்டுப் புலவரினும்
புகழ்மே லோங்கி
முத்தமிழின் சுவையுணரும் தென்னாட்டுப் புலவர்குழாம்
மொய்த்து வாழ
மெத்தமதுப் பொழிபொழில்சூழ் மதுரையில் இத்தமிழ்ச்சங்கம்
விழைந்து நாட்டும்
உத்தமனும் எழிர்பாண்டித் துரைபுகழால் வாழிபல
ஊழி மாதோ. (1)

அமுத மனைய தமிழோ டறமும் அறிஞர் குழுவும்
அவனி முழுதும் நிலவ அரிய நிதிகள் அருள்வோர்
கமல வயல்கள் புடைசூழ் புதுவையரசர், கவிஞர்
கருது முகவையதிபர், கலைகள் நிறையும் மதியோர்
தமது குடையின் நிழலைச் சகல உயிரும் இனிது
தழைய அளிசெய் தகைமை தழுவு கேவுரிவலவர்
அமரும் இவர்கள் செங்கோல் அகில உலகும் மகிழ
அரசு புரிய அருள அமலன் அடிகள் பணிவாம். (2)

தமிழினிது தழைய நிதியுதவு மவர்கள்
தகவுமிகு நகர தனிகர்குல மணிகள்
அமுதனைய கவிதை புனைபுலவர் இவர்கள்
அவனிமிசை நெடிது நிலவிநல முறவே. (3)

முத்தமிழும் சிறந்தோங்க முயல் மதுரைத்தமிழ்ச்சங்கம்
எத்திசையும் இசைபரவ இனிதூழி வாழியவே. (4)

இத்திருநா ளவைத்தலைமை யேற்றசென்னை மாகாண
மெத்துபுகழ்க் கவர்னரென மேதினிபோற்றிய பெருமான்
உத்தமன் கான்பஹதூர் ஸர் முஹம்மதுஸ்மான் உலகமிசை
நித்தம்உயர் பதவிபெற்று நீடூழி வாழியவே. (5)

உலகமெலாம் பொதுநீக்கி ஓராழி செலுத்திவரும்
அலகில்புகழ் ஐந்தாம்ஜார்ஜ் அரசர்பிரான் வாழியவே. (6)

இனிய செந்தமிழ் தழைக்கவே இறைவர்
இகலொழிந்தருள் சுரக்கவே
அனைவரும் களிசிறக்கவே தருமம்
அவனியெங்கணும் நிலைக்கவே. (7)

---

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

## முப்பத்தோராந்தொகுதி.

ஸ்ரீமுக—பவ ௵.

## *Vol.* XXXI.

## 1933–1934.

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

உ

# முப்பத்தோராந்தொகுதியின் உள்ளுறை


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
| --- | --- | --- |
| அநுதாபக்குறிப்பு:- | பத்திராசிரியர் | ௮௮ |
| உதிர்மலர்மாலை:— | ஸ்ரீமத். K. S. நவநீதகிருஷ்ணபாரதியார். | ௧௨௧ |
| உலோச்சனார்:— | ,, ஷ. சா. வேங்கடராமையர் | ௨௫ |
| எயினர்:— | ,, V. R. இராமசந்திர தீக்ஷிதர் M.A. | ௨௧ |
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:- | ,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், B.A. | ௧, ௯௪, ௧௧௩, ௧௨௯, ௧௫௯, ௧௬௯, ௨௦௯, ௨௨௫. |
| கருமகருத்தா:— | ,, ம. கா. சோமசுந்தரம்பிள்ளை. | ௧௪௯. |
| சங்கீதம்:— | ,, V. S. இராமஸ்வாமிசாஸ்திரிகள் B A, B L. | ௨௪௯ |
| செழுங்கதிர்ச்செல்வம்:- | ,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியார். | ௧௨௬, ௧௩௭, ௧௬௪ |
| ஞாயிற்றினைவழிபடல்:- | ,, வை. சுந்தரேசவாண்டையார் | ௧௧௭. |
| தமிழ்ச்சங்கம் செய்ய வேண்டிய வேலை:— | ,, இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை—திரு. S. சோமசுந்தரதேசிகர். | ௯௬ |
| தமிழ்ப்புத்தககாட்சிச்சாலையைத்திறந்துவைத்தவரின் விரிவுரை:- | | ௬௨ |
| தமிழன்பர்மஹாநாட்டுவரவேற்புப்பிரசங்கம்:- | | ௭௧ |
| தமிழன்பர்மஹாநாட்டைத்திறந்துவைத்தவரின்விரிவுரை:- | | ௮௬ |
| தருக்கசங்கிரஹ சோதனம்:— | பத்திராசிரியர். (திரு. நா.) | ௨௪௧ |
| நரிவிருத்த ஆராய்ச்சி:- | ஸ்ரீமத். பண்டித. இராமசுப்பிரமணியநாவலர். | ௧௯௭. |
| பத்திராசிரியர் குறிப்பு:— | | ௬௧ |
| பதிற்றுப்பத்து:— | வித்வான் R. வீரராகவய்யங்கார். | ௮௫ |

பரிசளிப்புப் பாராட்டு:— உதவிப்பத்திராசிரியர். அகூ

பரிசோதனத்தொடர்:- ஸ்ரீமத். T. N. அப்பண்ணையங்கார். உசுரு

பரிமேலழகருரைத்திறம்:— பத்திராசிரியர். (திரு. நா.) உகஎ

பல்லவர்:— ஸ்ரீமத். S. சோமசுந்தரதேசிகர். கஎகூ

பரிபாட்டுச் சிறப்புப்பாயிரம்:— ஸ்ரீமத். மு. இராகவையங்கார். சு0

பிழையும் திருத்தமும்:— கசுஅ

பிறர் நம்மைக் கண்டவிதம்:— ,, திரு. S. சோமசுந்தரதேசிகர். கஎ

புத்தகங்களின் பயன்:- ,, ஊ. சா. வேங்கடராமையர். உஙரு

மதிப்புரை:— பத்திராசிரியர். ருச, அ0, க0கூ, கசஉ, உஙஅ

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 31-ஆம் வருடக்கொண்டாட்ட நிகழ்ச்சி முதலியன:— சக—ருங

ஷை 33-ஆம் வருடக்கொண்டாட்ட நிகழ்ச்சி விவரம். உருசு

ஷை நிர்வாகஸபைத்தீர்மானங்கள். ருஎ, அங-அஅ, ககஎ, உசுக

ஷை மஹாஸபைத்தீர்மானங்கள். ருஅ, உசுங

மனுஷ்யத்வம்:— (மக்கட்டன்மை) ஸ்ரீமத். V. S இராமஸ்வாமி சாஸ்திரிகள் B.A. B.L. உஅங

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்:— பத்திராசிரியர் (திரு. நா.) கசரு

வாங்குவோர்வண்மை:— ,, ஊ. சா. வேங்கடராமையர் கஙங

வாழ்த்துரை:— மாட்சிமிக்க சென்னைகவர்னர் துரையவர்கள். சுரு

வினையெச்சமுடிபு:— பத்திராசிரியர் (திரு நா.) ககங

வெள்ளிவீதியார்:— ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையர். உஎங.


---



## அநுபந்தம்.

### விஷயங்கள்.


ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— (பகுதி ங, கூ)

தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— (பகுதி ங, கூ)

தனித்தமிழ்ப்பரீக்ஷைப் பாடவிவரக்குறிப்பு:- (பகுதி ங)

மதுரைத்தமிழ்ச்சங்க வரவு செலவு கணக்கு:— (பகுதி உ—கஉ)


---

### நூல்கள்.

[முற்றுப்பெற்றது.]


சங்கரநயினார்கோயில் அந்தாதி (குறிப்புரையுடன்:-) ,, மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. வே. சாமிநாதையர். (பகுதி க—ரு)


[முற்றுப்பெறாதவை.]


கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் (பகுதிஎ-கஉ)

குருகைமான்மியம்:- T. K. இராமாநுஜையங்கார் உதவிப்பத்திராசிரியர் (பகுதி க, ச—அ, க0)

பெருந்தொகை (விசேடக்குறிப்பு):- ,, மு. இராகவையங்கார். (பகுதி க-ங, ரு-கக)


---

### பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல்.

173. காவினைச் சூழ்ந்த களிமயில் காளென்ன காரணமால்
ஏவினைக் கொண்ட கலைசைத் தியாக ரிணைமலர்த்தாள்
பூவினைக் கொய்துமெய் யன்பொடு பூசிக்கும் புண்ணியர்தம்
தீவினை யற்றது போலற்ற வாவித் தினைப்புனமே. (௫)

### தலைமகன் வறுங்களம் நாடி மறுகல்.

174. நறுங்களம் போருக மிப்பர ணாக நயந்துநல்லம்
பெறுங்கள நாதன் கலைசைத் தியாகப் பிரானருள்போல்
உறுங்களந் தீர்த்தெம்மை யுய்வித்த மாவின் றொளித்துநிற்க
வறுங்களங் கண்டகண் காளெங்ங னமினி வாழ்குவதே. (௬)

### தலைமகன் தலைமகள் வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்.

175. நதிபொதி வேணிக் கலைசைத் தியாகர்நன் னாடனையாள்
பதியிது நோக்கியென் னாருயிர் சோர்தல் பசும்பொழில்வாய்
அதிமது ரக்கனி யுண்பானொ ரேழை யணுகற்கஞ்சி
மதிமயங் காநின்று வாயூறி யேங்கும் வகையொக்குமே. (௭)

## க௮. இரவுக்குறி.

### இறையோன் இருட்குறி வேண்டல்.

176. சுராதிபர் போற்றுங் கலைசைத் தியாகர்த் தொழாவுயிரை
விராவிய வல்லிருள் போற்கொண்டன் மூட மிடைந்தவிருள்
சராசர முற்றும் விழுங்கிய தால்வழி தான்றடவி
இராவிருந் தெய்தினன் யான்மட வீருங்க ளிம்மனைக்கே. (௧)

---

173. மால் ஏவினை - திருமாலாகிய அம்பை. தீவினை அற்றதுபோலற்ற வாவித் தினைப்புனமே: "அஞ்செழுத் தெங்குரு நாதன் றனதடி யார்க்கொழித்த, சஞ்சிதம் போலத் தினைமுற்று மான" (திருவாவடுதுறைக்கோவை, 179); "அன்பர் குலநிலத்துக், கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற தின்றிக் கடிப் புனமே" திருச்சிற். 143.

174. இப்பரண் நறுங்கள் அம்போருகமாக; அம்போருகம் - தாமரை. நல்லம் - விடம்; களம் - கழுத்து. உறும் கள்ளம் - மிக்க கள்ளத்தை. மா - திருமகள்.

175. சோர்தல் வாயூறியேங்கும் வகையை ஒக்கும்.

176. இரா விருந்து - இராவின்கண் விருந்தாக.

பாங்கி நெறியினது அருமை கூறல்.

177. சங்குலம் போடைக் கலைசைத் தியாகர் தரணியிற்கார்
மங்குலங் கெங்கு மடங்கல்கக் கா நிற்கு மாமடங்கல்
வெங்குல வேழங் களைப்பிளந் துண்ணு மிருந்தவிருள்
கங்குலஞ் சாதன்ப யார்வரு வாரெங் கடிநகர்க்கே. (௨)

தலைவன் நெறியினது எளிமை கூறல்.

178. கல்லால ரெங்கள் கலசத் தியாகர் கலைசையன்னாள்
கொல்லாமற் கொல்லு மிடைக்கே சரிக்கிடை கோளரிகள்
நில்லா வெதிர்குழற் காருக் குடையிரு ணீங்குமல்வில்
அல்லா தரவென் கழலொலிக் கஞ்சிடு மஞ்சலனே. (௩)

பாங்கி அவன்னாட்டணியியல் வினாதல்.

179. வெண்டலை மாலைக் கலைசைத் தியாகர் வியன்சிலம்பா
வண்டலை போதுமற் றியாதுடை யாறு மலைகலனும்
கொண்டலங் காரஞ்செய் சாந்தமும் யாவை குமுகுமெனும்
தண்டலை யாதுங்க டொண்டைநன் னாட்டிறை தையலர்க்கே. ()

தலைவன் அவள்னாட்டணியியல் வினாதல்.

180. குழையிட்ட காதர் கலைசைத் தியாகர் குலவரைமேல்
கழையிட்ட தோளிமற் றென்னாட் டணியியல் கட்டுரைத்தென்
மழையிட்ட நின்மலை நாட்டிள மாதர் வனைகலன்பூத்
தழையிட்ட சாந்தநின் றூடிட மீதெனச் சாற்றுகவே. (௫)

---

177. சங்கு உலம்பு ஓடை; உலம்புதல் - ஒலித்தல். மடங்கல் - இடியை. மாமடங்கல் - சிங்கம்.

178. இடைக்கேசரிக்கு - இடையாகிய சிங்கத்திற்கு. இடைகோளரிகள் - தோற்ற சிங்கங்கள்; இடைதல் - பின்னிடுதல். நில்லா : முற்று. அரவு - பாம்பு.

179. குமுகுமெனும்: "பசுமஞ்சள் குமுகுமுக்க" (அழகர்கலம்பகம், 10.) வண்டு அலையும் போது; போது - மலர்.

180. பூவையும், தழையையும், இட்ட சாந்தத்தையும். ஈதென்பதனைக் கலன்முதலியவற்றோடு தனித்தனியே கூட்டுக.



தலைமகற்குப் பாங்கி தன்னாட்டணியியல் சாற்றல்.

181. ஏந்தண்ணல் வேல கலைசைத் தியாக னிமாசலமேல்
மாந்தண் ணடையு முடையாக் குருவிந்த மாலிகையும்
காந்தண் மலர்களுஞ் சந்தனப் பூச்சுங் கலந்தணிந்தெம்
பூந்தண் ணடைமட வாரா டிடங்கணிப் பூம்பொழிலே. (௬)

பாங்கி தலைமகட்குத் தலைமகன்குறையறிவுறுத்தல்.

182. ஒருகால காலர் கலைசைத் தியாக ருயர்வரைமேல்
அருகால மேகம் பொரிபோ லுதிர்ச்சிந்த வார்த்தெழுந்தீ
ரீரிருகா லறுகின நால்வாயி னாம்ப லிரையருந்தும்
வருகா னிரவின் வரல்வேண் டினர்நம் மனைக்கன்பரே. (௭)

நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தல்.

183. பண்ணவர் போற்றுங் கலைசைத் தியாகர் பரிசுணர்ந்தோர்
பெண்ணறி வென்பது பேதைமைத் தென்று பிரித்துரைத்தல்
திண்ணநெஞ் சேசித் திரகாயம் பாயுஞ் செறியிரவில்
கண்ணன்ன காதலர் தாம்வர லொப்பினள் காரிகையே. (௮)

தலைமகள் நேர்ந்து பாங்கியோடு உரைத்தல்.

184. மெல்லிய லாய்தென் கலைசைத் தியாகர்தம் வெற்பிலங்கோர்
வல்லியங் கண்டு நடுங்கிடும் போதெதிர் வந்தெனைப்பாற்
புல்லியப் புல்லைத்தங் கைப்படைக் கூட்டிப் புரந்தவர்தாம்
எல்லி யவாவின ரேற்சொல்லு மாறென்னை யின்றுமொன்றே.

---

181. மாமரத்தின் தண்ணிய தழையை ஆடையாக. குருவிந்தம் - ஒருவகை மாணிக்கம்; திருவிளை. மாணிக்கம் விற்ற. 38 - 42, பார்க்க.

182. ஆல - அசைய. ஈரிருகால் அறுகு இனம் - நான்கு கால்களையுடைய அத்தியாளியின் கூட்டம். நால்வாயின் ஆம்பல் - தொங்கிய வாயினையுடைய யானை.

183. பெண்ணறிவென்பது பேதைமைத்து : "நுண்ணுணர் வுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே" (நன். சூ. 265, மயிலை. சங்கர. மேற்.) சித்திரகாயம் - புலி; "கடும்புலிக ளயர்ந்துசித்ர காயமெனும் பெயர்விளக்க" அழகர்கலம். 1.

184. வல்லியம் - புலியை. அப்புல்லை - அந்தப் புலியை. எல்லி அவாவினரேல் - இராக்குறியை விரும்பினராயின்.

தலைமகள் நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்கு உரைத்தல்.

185. சிலைவளை யாழியன் போற்றுங் கலைசைத் தியாகர்வெற்பா
மலைவளை யாநின்ற வுன்னெஞ் சுவப்ப வணங்கியங்கை
இலைவளை யாளை யிரந்திரந் தெயிர வீர்ந்தொடைசேர்
தலைவளை யாவருள் செய்யப்பெற் றேன்றவந் தானென்னவே. ()

பாங்கி தலைமகனைக் குறியிடத்துநிறுத்தித் தாய்துயில் அறிதல்.

186. நஞ்சாருங் கண்டர் கலைசைத் தியாகர்நன் னாடனையாய்
மஞ்சார் புனத்தினின் றூடா நமக்கு மகிழ்ச்சிதந்த
அஞ்சாயன் மென்மயி லாயங்க டேக்கி னகன்குடம்பைத்
துஞ்சாத வண்ணங்கைக் குன்றூன் றரிஞ்சிச் சுலாய்வருமே.

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வரவறிவுறுத்தல்.

187. குயிலே யனையசொற் கோமள மேவெண் குரைகடன்மேற்
றுயிலேறு கொண்ட கலைசைத் தியாகர் சுடர்க்கிரிமேல்
மயிலேறு கந்தர்வந் தாலெனக் கங்குனம் மாமனைக்கே
அயிலேந்து நம்மன்பர் வந்தார்தந் தார்பொம்ம லம்மலரே. (௧௨)

பாங்கி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டுசேறல்.

188. விரலாழி வின்மணித் தீபங் கொடுநம்மை மேவியன்பர்
வரலா லெதிர்கொளப் போதுகம் வாமங்கை மாளிகைகள்
நிரலார் கலைசைத் தியாகேசர் வெற்பினி னீலமஞ்ஞை
மூரலாறு சாலிசைத் தாலாட்டக் கண்டுயின் மொய்பொழிற்கே.

185. சிலை வளை ஆழியன் - வில்லையும் சங்கத்தையும் சக்கரத்தையும் உடைய திருமால். மலைவு அளையா நின்ற. இலை வளையாளை - இலைவடிவமாக உறுப்பு அமைக்கப்பட்ட வளையையுடைய தலைவியை. தலைவளையா - தலை வணங்கி.

186. ஆயம் - கூட்டம். கைக்குன்று - யானை.

187. வெண்கடல் மேல் துயிலுகின்ற திருமாலாகிய இடபத்தைக் கொண்ட; ஏறு - இடபம். பொம்மல் - பொலிவு.

188. விரல் மோதிரத்திலுள்ள ஒளியையுடைய மணியாகிய தீபத்தைக் கொண்டு. மங்கை: விளி. ஆறுகால் - வண்டு. இசையால் தாலாட்ட. ஆறுகால் தாலாட்ட மஞ்ஞை கண் துயில்; மஞ்ஞை - மயில்.



பாங்கி தலைமகளைக் குறியிடத்து உய்த்து நீங்கல்.

189. தெள்ளம் பணிசெஞ் சடையார் கலைசைத் தியாகர்வெற்பில்
வள்ளம் பெறுமுலை யாயுன்கண் வாயின் வளங்கவர்ந்து
விள்ளம் புயமென்று மாம்பலென் றும்பெயர் வேறுகொண்ட
கள்ளஞ் செறிமல ரெல்லாங்கொய் தேவந்து காட்டுவனே. (௧௪)

தலைமகன் தலைமகளைக் குறியிடத்து எதிர்ப்படுதல்.

190. இலக்கண மாடக் கலைசைத் தியாகர்மற் றிவ்விரவை
வலக்கண் விழித்துப் பகலாக்கச் சற்று மதித்தனரோ
சலக்கணின் கோயிற் கதவந் திறந்ததெத் தந்திரமென்
அலக்கண் டவிரமுன் வந்துநிற் கின்றவின் பாகரமே. (௧௫)

தலைமகள் ஆற்றினதருமை நினைந்திரங்கல்.

191. இடங்க ரகேகஞ் செறியாறு நீந்தி யியங்கரிய
இடங்கா வாமிரு கங்கட்கஞ் சாதன்ப வெண்கணர்க்கோர்
இடங்கரன் றீந்த கலைசைத் தியாக ரிறும்பிலென்னில்
இடங்கா வேலொடு வந்ததெவ் வாறிவ் விரவிடையே. (௧௬)

தலைமகன் தலைவியைத் தேற்றல்.

192. மட்டிட்ட கோதை கலைசைத் தியாகர் வரையகத்துன்
திட்டிக் குடைந்த சமனம்பு கொள்ளவென் றிண்ணியவேல்
ஒட்டிக் கிடந்த வுரிமையி னால்விலங் குள்ளவெல்லாம்
எட்டிக் கரக்கவென் வேலொளி மேய்ந்த திருளினையே. (௧௭)

189. தேன் அம்பு அணி; அம்பு - நீர். வள்ளம் - கிண்ணம். கள்ளம் - கபடம், கள்ளாகிய நீர். 197, பார்க்க.

190. வலக்கண் - சூரியன். சலக்கண் - நீரிலே உள்ள; நீரிலே உள்ள இன்கோயிலென்றது தாமரையை; தலைமகளைத் திருமகளாகப் பாவித்துக்கூறிய படி. இன்பாகரமே - இன்பத்திற்கு இருப்பிடமாக உள்ளாய்.

191. இடங்கர் - முதலை. இயங்க அரிய இடத்தையும். காவு ஆம் மிருகங்கட்கு. எண்கண்ணர்க்கு - பிரமதேவர்க்கு. இடங்கர் அன்று ஈந்த - கலசத்தை அக்காலத்திற்கொடுத்த. என் இல்லிடத்திற்கு. கர வேலொடு; காம் - கை.

192. மட்டிட்ட கோதை: விளி. திட்டிக்கு - கண்களுக்கு. சமன் - யமன். வேலை ஒட்டி. கரக்க - மறைய.

### புணர்ச்சியின் மகிழ்தல்.

193. எல்லாரும் போற்றும் கலைசைத் தியாகரை யெய்துமன்பர்
எல்லாஞ்சிவமென் றுகண்டுண்ணல்போ லுண்ணவிங்கிவண்மெய்
எல்லா மமிழ்திற் சமைத்துநல் காரண னென்னுடலம்
எல்லாஞ்செந் நாவுடை வாயாக வென்கொ லியற்றிலனே. (கஅ)

### புகழ்தல்.

194. அடியார்க் கருளுஞ் சிதம்பர வீச ரணிதிருவெண்
பொடியா ரிருக்குந் திருக்கோ விருந்த புரவரைமேல்
வெடியார் மலர்க்குழ லாய்வனத் திற்றவ மேவிடினும்
கொடியா ருனதிடைக் கொப்பாவ தில்லைக் குணம்படைத்தே. ()

### தலைமகனைத் தலைமகள் குறிவரல் விலக்கல்:

195. கதிரார் கணிச்சிக் கலைசைத் தியாகர் கனவரைச்சூர்
அதிராத் திரிதரு மல்லாம லன்ப வடல்வயமா
வெதிராத் திரியும் வெதிர்வேர்க் கவலை விசும்பிவிருள்
வதிராத் திரியில் வினையேன் பொருட்டினி வாரற்கவே. (உ0)

### தலைமகன் தலைமகளை இல்வயின் விடுத்தல்.

196. வெம்போகி பூண்ட கலைசைத் தியாகர் வியன்வரைப்பூங்
கொம்போ திடுகிடை யீர்கைத் தளிரிற் குளவிகுற்று
தும்போ தகஞ்செல்லு மொண்பளிங் கிற்றலத் தூடுபயத்
தம்போ ருகமுறல் போற்பஞ்சி யூட்டு மடிகள்வைத்தே. (உக)

193. உண்ணல் - அனுபவித்தல். யான் உண்ணநல்கிய ஆ'ணன்; ஆரணன் - பிரமதேவன்.

194. வெடிஆர் - வெடித்தல் ஆர்ந்த; வெடித்தல் - மலர்தல்; "அந்தி வெடிமுல்லை" (தனிப்.) கொடியார் - பூங்கொடி, கொடியவர்.

195. சூர் - தெய்வங்கள். வெதிரா - கோபம்கொண்டு; வெதிர்த்தல் - கோபங்கொள்ளல். வெதிர்வேர்க்கவலை - மூங்கில்களின் வேர்களையுடைய பிளவு பட்டவழி. இருள்வதி - இருள் தங்கியிருக்கின்ற.

196. போகி - பாம்பு. பூங்கொப்பு ஒது - பூங்கொம்பை உவமையாகச் சொல்லப்பெற்ற. குளவி குற்று - காட்டுமல்லிகைப்பூவைப் பறியாமல். உம் போது அகம் செல்லும் - உமக்குரிய தாமரைப்பூவாகிய வீட்டை அடைமின். பளிங்குத்தலத்தூடு செல்லுமென இயைக்க. தஞ்சை. 193-ஆம் செய்யுளைப் பார்க்க.



### பாங்கி தலைமகளை யெய்திக் கையுறை காட்டல்.

197. செவ்வாய் தனக்குநின் றிங்கள் முகத்திற்குந் தெவ்வெனலாம்
இவ்வாம்பல் பங்கயங் கொய்துவந் தேனஞ்ச லெவ்விருளும்
ஒவ்வாத கார்க்குழற் கேற்குங்கண் டாய்தைய லூட்புகுந்தென்
வெவ்வாசு தீர்க்குங் கலைசைத் தியாகர் வெளிக்குன்றிலே. ()

### பாங்கி தலைமகளை இற்கொண்டகறல்.

198. கயந்தந்த தெவ்வலர் கஞ்சுற் களைந்தனங் காண்பயந்து
பயந்தந்த வள்கண் விழித்தின் றதட்டிப் பயந்தருமுன்
இயந்தந்த வோசைக் கலைசைச் சிதம்பர வீசர்வெற்பில்
நயந்தந்த செல்விநின் பூங்கோயிற் கொல்லை நடந்தருளே. (உக)

### பாங்கி தலைமகனைப் பின்சென்று வரவு விலக்கல்.

199. அறவாணர் வாழுங் கலைசைத் தியாகர்வெற் பாரமகில்
மறவா ளமர்குறைத் தாரழற் கூட்ட வரும்புகையோ
டுறவா ரிருளி லொருநீ தனிவா லூங்கிரவில்
திறவாக் கதவ மொருவூ றணங்கின் றிருமனைக்கே. (உச)

### தலைமகன் மயக்கல்.

200. அப்பேறு சென்னிக் கலைசைத் தியாக ரசலமின்னே
செப்பேறு கொங்கையு நானும் புணர்ந்தின்பத் தேனருந்தும்
இப்பேறு கண்டு மதுரக் கனியுணு மெல்லையிலோர்
கைப்பேறு காஞ்சிரங் காயிட்ட தென்னக் கழறினையே. (உரு)

197. தையல்: விளி. வெளிக்குன்று - வெள்ளிக்குன்று.

198. கயம் - ஆழமான நீர்நிலை. தெவ் - பகைமை. பயந்து - பெற்று. பயம் தந்தவள் - பாலைஅளித்த தாய். பயம் தருமுன் - அச்சத்தைத்தருவதற்கு முன். பயந்தந்தவள் அதட்டி: "அன்னைவெங்கையினதட்ட" (அழகர்கலம்.) இயம் - வாத்தியம். நயம் - இன்பம். பூங்கோயில் - பூவாகிய கோயில்.

199. மறவாளால். ஊட்ட - ஊட்டுதலால். உறவு ஆர். வால் - வாராதே. தூறுகதவமென்றது நூறிதழ்களை; "சதபத்திரத்தான்" (206) என்பர்பின்; திருமனை-தாமரைமலர். நூற்றிதழ்த்தாமரைமலரில் இருக்கும் திருமகளாக நினைந்து தலைமகளைக்கூறியபடி; தீருச்சிற். 206-ம் செய்யுளைப்பார்க்க.

200. எல்லை - காலம். காஞ்சிரங்காய் - எட்டிக்காயை.

### தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்.

201. ஓங்குங் கலைசைத் தியாகேசர்க் கன்பில ருள்ளிருள்போல்
வீங்குங் கனையிரு ணீசெல் வதற்கு விதிர்விதிர்த்தே
ஏங்கு மிவளுய்ய நின்னூர்புக் குன்னெழின் மாளிகைமுன்
தூங்கு மணியொலி கேட்பிக்க வேண்டுந் துணைமன்னனே. ()

### திருமகட் புணர்ந்தவன் சேறல்.

202. சரியாங் கறிந்தெம் பதிக்கே குதலெளி தஞ்செழுத்துச்
சரியார்க் கரியர் கலைசைத் தியாகர் தடவரைக்கே
சரியானை மத்தகம் பற்றிடுங் கங்குலிற் றையலங்கைச்
சரியார்ந்த செம்மணி மின்னேவெய் யோற்குச் சரிநிற்குமே. ()

## கச. இரவுக்குறி யிடையீடு.

### இறைவிக்கு இகுளை இறைவரவுணர்த்தல்.

203. செய்யா மொழியர் கலைசைத் தியாகர் சிலம்பில்வளைக்
கையா யிஃதென்ன காரண மோகறுங் கான்மலர்க்கை
தையா ரணியத் தயனின்ற புன்னைத் தருவிலன்னம்
மையா மினிமுற் றுங் கண்டுயி லாதல மந்தனவே. (க)

### தான்குறிமருண்டமை தலைவிஅவட்குரைத்தல்.

204. நானோர் குறியினை நங்கோன் குறியென்று நாடிச்சென்று
கானேவ நின்றுறு புள்ளொலி கேட்டுக் கலைசையிலெம்
மானோர் சிதம்பர மாதே வனைவணங் காரின்வினை
தானோ விதுவென்று நொந்துவந் தேதன் பின்னைத் தாழ்குழலே.

201. விதிர்விதிர்த்து - நடுநடுங்கி. மணி - ஆராய்ச்சிமணி; "வாயிற் கடைமணி நடுநா நடுங்க" (சிலப். 20: 53); "ஆடுங் கடைமணி நாவசை யாமல்" ஒட்டக்கூத்தர் வாக்கு.

202. சரி - வழி. அஞ்செழுத்தை உச்சரியாதவர்களுக்கு. கேசரி - சிங்கம். கைச்சரி ஆர்ந்த - கைவளையில்பொருந்திய. செம்மணிமின்னே - செம்மணியின் ஒளியே. சரிநிற்கும் - ஒப்பாகும்.

203. செய்யா மொழி - வேதம்; "செய்யா மொழிக்கும்" (திருவள்ளுவ மாலை.) கான்மலர்க் கைதை ஆரணியத்து - வாசனை உள்ள மலர்களையுடைய தாழங்காட்டில். மை யாமினி முற்றும் - கருமையையுடைய இராத்திரி எல்லாம். புன்னைமரத்தில் அன்னமிருத்தல்: "கன்னியம் புன்னைமேலன்னங்காள்" யா-வி. சூ. 60, மேற்.

204. கால் நோவ. கலைசையில் எம்மான். சிதம்பரமாதேவனை-சிதம்பரேசனை.



### பாங்கி தலைமகன் தீங்கெடுத்தியம்பல்.

205. வேயோ வெனும்பசுந் தோளாய் கலைசையுண் மேவிமனத்
தூயோர் பரசுஞ் சிதம்பர வீசற் றொழாதவர்போல்
நீயோகை யின்றி நெடுமூச் செறிய நிகழ்த்துமந்தத்
தீயோர் துணிந்துனக் கையுற வாங்குறி செய்தனரே. (ரு)

### தலைமகன் புலந்துபோதல்.

206. விழுத்தவஞ் செய்சத பத்திரத் தாள்வெளி மேவுமென்றே
முழுத்தமர் தன்னிற் கலைசைத் தியாகர் முளரியந்தாள்
வழுத்தல்செய் யாதவர் தீவினை போல வளைத்ததனை
இழுத்தலைத்தாய்நெஞ்சமேபெண் சொல்வேனிந்தவேழைமைக்கே.

### புலர்ந்தபின் வறுங்களந் தலைவிகண்டிரங்கல்.

207. கங்காள வேடர் கலைசைத் தியாகர் கழித்தமுண்ட
கங்கா ளலம்புசங் கங்காள் கடற்கரைக் கானற்புன்னை
கங்காளெங் காவலர் யான்வந்து போனபின் காதலுருக்
கங்காண வந்தன ரோவுண்மை சொன்மின்கள் கங்குலிலே. (ரு)

### இதுவுமது.

208. திருவார் கலைசைத் தியாகேச ரைத்தரி சித்தவர்போற்
குருவா லருப்பு நகைமுத்தங் காட்டிப்பொன் கூர்பவள
உருவாய் மலர்ந்துகொங் கையேந்திப் பாசடை யோதியணி
தருவாலைப் புன்னைநல் லாய்மகிழ்ந் தாயுன் றலைவர்க்கண்டே. ()

205. மேவித் தொழாதவரென இயைக்க. நெடுமூச்செறியக் குறி செய்தனர்.

206. சதபத்திரத்தாள் - தாமரைமலரிலுள்ள திருமகள்போன்ற தலைவி. தமம் - இருட்டு. வளைத்து - தடுத்து. ஏழைமை - அறியாமை.

207. கங்காளம் - முழுவெலும்பு. முண்டகங்காள் - தாழைகளே. புன்னை கங்காள் - புன்னைகளே. காதல் உருக்கம் - காதலாலுண்டாகிய உருக்கத்தை.

208. குரு வால் அருப்பு - வெள்ளொளியை யுடைய அரும்பாகிய. பாசடை ஓதி - பசிய இலையாகிய கூந்தலை. வாலை - இளையவள். புன்னை நல்லாய் - புன்னையாகிய மங்கையே.

### தலைமகள் பாங்கியோடுரைத்தல்.

209. நிறப்பது மானன நேரிழை யாயென் னெடுங்கொடிய
பிறப்பலை மாற்றுங் கலைசைத் தியாகரைப் பேணினர்போற்
சிறப்பவர் தண்டுறைச் சேர்ப்பரங் கேகுறி செய்வதற்கு
மறப்பர் கொலோமழை தான்பெய்யுங் கால மறக்கினுமே. (எ)

### தலைமகள்அவலம் பாங்கி தணித்தல்

210. குன்றேவிற் கொண்ட கலைசைத் தியாகரைக் கூறலர்போல்
இன்றே யிரங்குத லேந்திழை யாயன்ப ரேம்பரித்தேர்ப்
பொன்றே சிழந்து பொய்த் தாலும்பொய் யாரென்றும் பூண்டதள
வொன்றே றியகவி மாலை யரசுகண் டோர்ந்துகொள்ளே. (அ)

### இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல்.

211. செழுந்தேஞ்சிகழிகைத் திண்புயத் தீரெம்மைச்செல்லல்வெந்தீக்
கொழுந்தேற வைத்தனிர் பின்புவந் தாற்றலிர் கும்பியினீ
அழுந்தேலென் றாளுங் கலைசைத் தியாக ரடிக்கணும்மூர்க்
கெழுந்தே வரத்துணிந் தேப்பாவி யாறென் றிருத்தியதே. (கூ)

209. பதுமானனம் - தாமரைமலரைப் போன்ற முகத்தையுடைய. சேர்ப்பர் - கடற்கரையையுடைய தலைவர். மழை - மேகம். மழை பெய்யும் காலத்தை மறக்கினும் மறப்பர்கொலோவென முடிக்க.

210. இரங்குதல் என் - இரங்குதற்குக் காரணம் யாது? பொன் - சூரியன். உண்மைக்கு ஞாயிற்றை உவமை கூறுதல் மரபு; "ஞாயிறொடு திங்க ளன்ன வாய்மையும்" (நன். வி. சிறப்பு. மேற்.) அளவு ஒன்று அறிய கவி=காவி; காவி மாலை - கருங்குவளைமாலை. அரசமரம் காவிமாலையைப் பூண்டது.

211. செல்லலாகிய தீக்கொழுந்து; செல்லல் - துன்பம். கும்பி - பிறப்பு; "அழுந்தே னரகத் தியானென் றிருப்ப" (திருச்சிற். 166.) அடிக்கலிலுள்ள உம்மூர்க்கு. "உன் பதிவினவி, அங்கே வரவெண்ணி னேம்பொன்னி யாற்றினுக் கஞ்சினமே" (திருவாவடுதுறைக்கோவை, 216) என்று இந்நூலாசிரியர் கூறியது இங்கே ஒப்புநோக்கற்பாலது.



### இறைவிமேல் இறைவன் குறிபிழைப் பேற்றல்.

212. குறப்பேதை யர்க்குக் குலதெய்வ மாய்வந்த கோமளமான்
மறப்பேறு சித்த முடையவ ளாயினு மாதவிழாச்
சிறப்பேறு தொட்டிக் கலைவாழ் சிதம்பர தேவன்வெற்பிற்
பிறப்பே ழினுமற வேனுங்கண் மங்கையைப் பெண்கொடியே. ()

### தலைமகன் குறிமருண்டமை தோழி தலைமகற்குரைத்தல்.

213. கொய்யு மலர்ச்சுனை மாங்கனி வீழ்தொறுங் கொற்றவநீ
செய்யுங் குறியென் றடிக்கடி பார்த்துத் திகைத்தழுங்கி
மையுண்ட கண்டர் கலைசைத் தியாகரை வாழ்த்தலர்போல்
நையும் படியெழுத் தோவென்று மீண்டன ணன்னுதலே. (கக)

### அவன்மொழிக்கொடுமை சென்று அவளவட்கியம்பல்.

214. வெங்கோ ளரிதிரி யாமத்தி யாம்வந்து வீபெழுப்பாப்
பைங்கோழி கூவள வுங்கறங் கச்செய்து பார்த்துநின்றே
செங்கோ கனகத் திருவே கலைசைத் தியாகர்வெற்பர்
எங்கோ விருந்த புரோக்கிச் சென்றன மென்றனரே. (கஉ)

### என்பிழைப்பன்றென்று இறைவி நோதல்.

215. நீளுஞ் சுனைக்கய லாண்பிசைப் பாய்தொறு கேடியங்கென்
தாளுந் தளர்ந்திடச் செல்லா திறந்தனன் றைபன்மெய்ப்பர்
நாளும் பழிச்சுங் கலைசைத் தியாகர்கன் னுடர்கொன்னே
மீளும் படிசெய் தனரென்ப ரேலென் விதியென்பதே. (கங)

212. குலதெய்வம்: "அழிவிலர் முயலு மார்வ மாக்கள், வழிபடு தெய்வங் கட்கண் டாங்கு,...வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே" நற். 9: 1-9.

213. எழுத்தோ - தலையெழுத்தோ; "அளந்தென் றலையி லெழுத்தெனுங் கூழை யரும்பொருளே" சங்கரநயினார்கோயிலந்தாதி, 9.

214. வீ - பறவைகளை. செங்கோகனகம் - செந்தாமரைமலர்.

215. ஆண் - ஒருவகைமரம்; "ஆண்மரக்கிளவி" (தொல். சூ 304); "கொங்கை யேந்திய வாண்களு மவண", "ஆணை லமொரு கன்னியை மணப்ப வாணையும்" (காஞ்சிப். நாட்டுப். 46-7.) இறந்தனன் - தங்கினேன். தையல்: விளி. அது விதியென்பதென ஒரு சொல் வருவிக்க.

### தாய் துஞ்சாமை.

216. சித்தாங் கலைசைத் தியாகர் நொடித்தலைச் செய்யுமந்நாட்
கொத்தார் தமோமயம் போலுமிக் கங்குற் குளிர்ந்ததடத்
தெத்தா மரையு முறங்கநம் மன்னை யிரண்டுநய
னத்தா மரைமுகி ழாவென்ன காரண நன்னுதலே. (௧௪)

### நாய் துஞ்சாமை.

217. இணங்குமன் றேயிந்தப் பெண்ணென் பிறப்பன்ப ரிங்குறமால்
வணங்குங் கலைசைச் சிதம்பர வீசரை வாழ்த்தலின்றிப்
பிணங்கும் புறமதத் தார்குரைத் தாங்கிப் பிறங்கிருள்வாய்ச்
சுணங்குக் கணங்கள் குரைத்தன்னை துஞ்சினுந் துஞ்சலவே. ()

### ஊர் துஞ்சாமை.

218. விண்ணேறு சோலைக் கலைசைத் தியாகர் வியன்சிலம்பின்
கண்ணேயிக் கங்குலென் கண்ணே யனையவர்க் காண்பதெங்கே
பெண்ணே குணக்கிற் புகர்தோன் றளவும் பெருங்குறிஞ்சிப்
பண்ணே யெடுத்துப் பகர்ந்துறங் காரிப் பதியவரே. (௧௬)

### காவலர் கடுகுதல்.

219. காவலர் போற்றுங் கலைசைச் சிதம்பர நாதர்வெற்பில்
மாவல ரோட்டுநம் மன்பர்பொற் றேரொலி மாற்றுவித்தென்
கோவல ரோடவிவ் வெல்லியி லல்லியங் கோதைநல்லாய்
காவலர் கைப்பறை யோசையம் பேறுமென் காதகத்தே. (௧௭)

---

216. சித்து - அறிவு. நொடித்தல் - அழித்தல். தமோமயம் - தாமஸ குணமயம்; "தாமதத் தாமிருள் போற்குழ லிக்கு" (245.) நயனத்தாமரை - கண்களாகிய தாமரைமலர்கள். முகிழா - குவியா; தூங்கவில்லை யென்றபடி.

217. இணங்குமன்றே இந்தப்பெண்ணென் பிறப்பு; குறிப்பால் தன்னை இகழ்ந்தபடி. சுணங்குக் கணங்கள் - நாய்க்கூட்டங்கள்.

218. சிலம்பின்கண்ணே - மலையிடத்தே. புகர் - சுக்கிரன். குறிஞ்சிப் பண், குறிஞ்சிநிலத்திற்கும் அந்நிலத்திற்கு உரிய சிறுபொழுதாகிய நள்ளிரவிற்கும் உரியது.

219. மாவலர் - குதிரை ஓட்டுதலில் வல்லவர். என் கோ அலர் ஓட - என் கண்களில் நீரோட; அலர் - நீர். ஓசையம்பு - ஓசையாகிய பாணம்; "ஏதிலர் மாந்திப் பேழையொ டெய்தின ரென்னவின்றேன், காரினு ளாழக் கோல்பாய்ந்த தொத்தது காரிகையே" (241) என்பர் பின்னும்.



### நிலவுவெளிப்படுதல்.

220. கொவ்வைகொள் வாய்ச்சி கலைசைத் தியாகர் குளிர்கண்ணதாய்க்
கவ்வைக ளர்க்கு நிலவீரெண் வெள்ளைக் கலைகளினால்
இவ்வைய முற்று மடங்கிடப் போர்த்தவி னெம்மன்னரே
றவ்வைய முங்கொண்டு கோடையெவ் வாறிங் கடுத்திடுமே. (௧௮)

### கூகை குழறல்.

221. கோட்டா லமர்ந்த கலைசைத் தியாகநங் கூத்தனைவெண்
கோட்டாற் செயுங்குழை யானைத் தொழாத கொடியவர்சொற்
கோட்டாலை போல்வல்லி நாம்பெரும் பேழுறக் கூரிருள்வாய்க்
கோட்டான் மராமர மேலேறிக் கொண்டு குழறிடுமே. (௧௯)

### கோழிகுரற்காட்டுதல்.

222. ஆழிப் புரிசைக் கலைசைத் தியாக ரடுக்கன்மின்னே
சூழிக் களிற்றண்ணன் மார்பணி மாணிக்கச் சோதிகண்டே
யூழிப் பொழுது புலர்ந்ததென் றேகள் ளுறுமிரவிற்
கோழிக் குலங்கண்மன் கூவா வெழுப்புங் குறிச்சியையே. (௨௦)

### இதுவுமது.

223. செவ்வேலை யைந்துசெய் தாளுங் கலைசைத் தியாகர்வெற்பர்
கைவ்வேலை யந்த வருணோ தயமெனக் கண்டுமெநுண்
டிவ்வேலை யாவ விடியலென் றேவிவ் விடையிருளில்
அவ்வேலை யார்த்தெனக் கூக்குரல் காட்டிடு மாண்டலையே. (௨௧)

---

220. குளிர்கண்ணதாய் - சிவபெருமானுடைய இடக்கண்ணின் உருவமாகி. கலைகள் - கிரணங்கள், ஆடைகள். கோடை - குதிரை, கோடைக்காலம். சந்திரகிரணத்தால் உலகம் மூடப்பட்டிருக்கும்பொழுது கோடை எவ்வாறு வருமென்பது ஒரு நயம்.

221. கோடு ஆல் - கிளைகளையுடைய ஆலமரத்தின்கீழ். வெண்கோடு - சங்கம். சொற்கோட்டாலை - சொல்லின் துன்பச்செயல்; "குலதெய்வம் பண்ணுமிந்தக் கோட்டாலை யென்றான்." விறலிவிடுதூது.

222. ஆழி - வட்டம். ஊழிப்பொழுது - யுகத்தைப் போன்று நீட்டித்த இராப்பொழுது; "ஊழிபெயர்ந் தெனக்கங்கு லொருவண்ணம் புடைபெயர" (கம்ப. மிதிலைக்காட்சி. 155.) மன்: அசைநிலை.

223. செவ்வேலை ஐந்து - செவ்விய படைப்பு முதலிய ஐந்து தொழில்களை. வெற்பாது கையிலுள்ள வேற்படையை. இவ்வேலை - இந்த வேளையை. ஆவ: இரக்கக் குறிப்பு. அவ்வேலை - அந்தக்கடல். ஆண்டலை - கோழி.

## ௧௫. வரைதல் வேட்கை.

### தலைமகளைப் பாங்கி பருவரல் வினாதல்.

224. அம்மனை யானவர் தம்முனி வுண்டுகோ லக்கலைசை
அம்மனை யாக்கொள் சிதம்பர வீச ரருளன்னநீ
அம்மனை யாடிலை யூசல் கயிறற்ற தோவறியேன்
அம்மனை யாநிற்றி யென்னோசொல் லாயுன் னகங்கொண்டதே.

### தலைமகள் அருமறை செவிலியறிந்தமை கூறல்.

225. அருந்தியி னீங்கிக் கலைசைத் தியாக ரசலத்தெமை
வருத்திய வன்ப ருருவெளித் தோன்ற வரவினைய்
உருத்திகழ் தாரிடு மால்பார்த் திதிலோன் றுளதெனநம்
கருத்தின் முளைத்த வொருபுது வின்றனை கண்டனளே. (௨)

### தலைமகள் தலைமகன்வருந்தோழிற்கு அருமைசாற்றல்.

226. உலைவுற்ற காலன்னை ஞாளியிவ் வூர்கண் ணுறங்கினுமூர்த்
தலையுற்ற காவலர் காய்வார் மதிதனைத் தந்ததொப்பாம்
மலையுற்ற கூகையும் வாரணக் கூட்டமும் வாயடையா
கலைசைத் தியாகர் வரையன்பர் காட்சியென் கட்கரிதே. (௩)

---

224 அம்மனை ஆனவர் - தாய்மாருடைய. கலைசையை அழகிய மனை யாகக்கொண்ட. அம்ம னையாகிற்றி.

225. அன்பரதுஉரு வெளியில்தோன்ற. மால் பார்த்து - மயக்கத்தைக் கண்டறிந்து. புதவு - இரகசியம்; "திறப்பல் வாழிவேண் டன்னைநங் கதவே" குறுந். 321.

226. அன்னையும் நாயும் இவ்வூராரும். தன்னைத் தந்ததென்றது பாற் கடலை. மலையுற்றகூகை: "குன்றக்கூகை" (குறுந். 153 : 1.) கட்கு - கண் ணுக்கு.



### தலைவி தலைமகனூர்க்குச் செல ஒருப்படுதல்.

227. ஒருப்பா டடனென் னலனுண்ட தேர்மன்ன ரூரகம்போய்
விருப்பா லவருட னெய்துவ மோதெய்வ வேதமெனும்
திருப்பா துகையிட்ட தாளார் கலைசைத் தியாகர்வெற்பிற்
சுருப்பா குலமல்கு பூங்குழன் மாங்குயிற் றாமொழியே. (௪)

### பாங்கி தலைவனைப் பழித்தல்.

228. செய்யகத் தேகன்னற் சாறார் கலைசைத் தியாகர்வெற்பர்
மெய்யகத் தேயுற்ற வின்னுயிர் போனம்மை மேவியொன்றாய்ப்
பொய்யகத் தேவைத்துப் பின்னுண் மறந்தனர் பொன்னனையாய்
வையகத் தேயில்லை யாலவர் போலொரு வன்கணரே. (௫)

### தலைமகள் இயற்பட மொழிதல்.

229. சிந்திக்கு நேரும் விழிமொழிப் பாங்கி திகைத்துளங்க
சிந்திக் குருகென்கைவிட்டோடற்கேங்கல்வெண்டிங்களென் றாழ்
சிந்திக்கு நந்திலுந் தெய்ப்பூங் கலைசைத் தியாகர்வெற்பன்
சிந்திக்கு மோவொரு தீமைநம் பாற்செயல் சித்தத்திலே. (௬)

### தலைமகள் கனவுநலிவுஉரைத்தல்.

230. இலவா ரிதழி சிதம்பர வீச ரெழிற்கலைசைப்
புலவா ரயிலன்ப ரென்கன வூடு புகுந்துதழீஇப்
பலவா றினிதின் விளையாடப் பெற்றும் பயன்கொணலம்
கலவா திழந்தனை தைவந் தனனிரு கண்விழித்தே. (௭)

---

227. ஒருப்பாடு - ஒன்றிநிற்றல். போய் - நாம் போய். வேதமென்னும் திருப்பாதுகை: "மறையே நமது பாதுகையாம்" (திருவிளை. உலவாக்கிழி. 9.) சுருப்பு - வண்டு. ஆகுலம் - ஆரவாரம்.

228. கன்னற்சாறு - கருப்பஞ்சாறு. தலைவன் உயிர்: "மனையுறை மகளிர்க் காடவ ருயிரென" (குறுந். 135 : 2.) பொன் - திருமகள்.

229. சிந்து - கடல். இக்கு - கரும்பு. பாங்கி: விளி. உளம் கசிந்து. இ குருகு - இந்த வளையல்கள். திங்களும் சூரியனும் கெட்டு. கு நந்திலும் - பூமி அழிந்தாலும். சிந்திக்குமோ - சிந்திப்பானோ.

230. இலவு ஆர் இதழி - இலவம்பூவை ஒத்த இதழை உடையாய். என் னைத் தழுவி. பயன் - பிரயோசனம்.

### கவினழிபு உரைத்தல்.

231. சேணேறு பொன்னெயில் சூழுங் கலைசைத் தியாகர்வெற்பில்
தூணேர் புயத்தன்பர் சேர்ந்தா லகன்றவர் தூரஞ்சென்றால்
ஊணேது மற்றவர் போல்விரைந் தொன்றி யொளிவளையாய்
வீணே பசலை விருந்தாக வுண்ணுமென் மெய்பழகே. (அ)

### தலைமகள் தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்.

232. கொழிவான நீற்றர் கலைசைத் தியாகரைக் கூறலர்போற்
பழிவாய்ந்த வெங்கட் பசலையின் கொள்ளையைப் பார்த்துநல்ல
வழிவாய்ந்த வன்பர் திருச்செவிக் கேற வகுத்தெடுத்து
மொழிவா ரொருவருண் டேனுமு மூய்குவ மொய்குழலே. (கூ)

### துன்புறு பாங்கி சொல்லெனச் சொல்லல்.

233. இவருக் கணியுங் கலைசைத் தியாகர்க் கினியவெற்பர்
தவருக்கு நேர்நுத லாய்பிரி வாரிற் றணந்தெனுள்ளத்
தெவருக்கு நோன்று தெளித்தென் னிடர்களெல் லாமறிவார்
அவருக் கினிப்புதி தாயென்னை யானென் றறிவிப்பதே. (௧0)

### அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி.

234. மங்கல மோங்குங் கலைசைத் தியாகர் மணிவரைமேற்
கொங்கலர் கூந்தற் கொடியே மதன்விடுங் கோலெனுங்கூர்
தங்கல ருக்குந் தடமுலை மாதர் தடைபறவாய்
பொங்கல ரான தழற்குமென் கட்புனல் பொங்கிடுமே. (௧௧)

---

231. அகன்று - பசலை என்னைவிட்டு நீங்கி; "ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க, பாசி யற்றே பசலை காதலர், தொடுவுழித் தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப் பரத்த லானே" (குறுந். 399.) பசலை மெய்யழகை உண்ணுமென இயைக்க; "பசலை யுணீஇயர் வேண்டும்......என் மாமைக் கவினே" குறுந். 27.

232. கொழிவு ஆன நீறு - செழித்த நீறு; வடிக்கட்டிய நீறெனலுமாம்.

233. இ அருக்கு - இந்த எருக்கம்பூவை; இ: செஞ்சறி சுட்டு. தவருக்கு - வில்லுக்கு. பிரிவாரில் - பிரிபவரைப்போல.

234. கொங்கு அலர் - மணம் பரந்த. கோல் - பாணம். அலர் ஆன தழற்கும் - பழிமொழியான நெருப்பிற்கும். தழற்கு நீர் பொங்குமென்பது ஒரு நயம்.

௨

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

### 1934-ம் ஞ ஜூன்மாத வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1934 ஜூன் | வரவு 1933 ஜூன் | விவரம் | செலவு 1934 ஜூன் | செலவு 1933 ஜூன் |
|---|---|---|---|---|---|
| I General Section: | | | I General Section: | | |
| (1) மாதச்சந்தா வகையில் வரவு ... | 150 ... ... | | (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 138 ... ... | |
| (2) சங்கக்காலியிடத்திற்கு மாத வாடகை வரவு ... | 30 ... ... | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 127 ... ... | |
| | | | (3) Stationery contingencies வகையிற்செலவு ... | 11 9 3 | |
| | | | (4) சங்கக்கட்டிடவேலைகள் சம்பந்தமாகச் செலவு ... | 853 13 3 | |
| | | | (5) தபால், தந்தி வகையிற்செலவு | 2 11 ... | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொத்தம் ரு ... | 180 | ... | ... | 81 | 15 | ... |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) செந்தமிழ்ப் பத்திரிகைக்குச் சந்தா வகையில் வரவு ... | 4 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 189 | 13 | ... | | | |
| (3) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ... | ... | 8 | ... | | | |
| மொத்தம் ரு ... | 194 | 5 | ... | 105 | 6 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (6) சங்கமாபீச நில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு... | 6 | ... | ... | | | |
| மொத்தம் ரு ... | 1139 | 1 | 6 | 252 | 1 | |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 35 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ... | ... | 12 | ... | | | |
| (3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு | 106 | ... | ... | | | |
| (4) தபால், தந்திவகையிற் செலவு. ... | 19 | 8 | ... | | | |
| மொத்தம் ரு ... | 161 | 4 | ... | 40 | ... | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **III Press Section:** | | | | | | |
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு | 110 | ... | ... | | | |
| (2) பைண்டிங் கூலிவகையில் வரவு ... | 6 | ... | ... | | | |
| மொத்தம் ரு ... | 116 | ... | ... | ... | ... | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **III Press Section:** | | | | | | |
| (1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 31 | 10 | 4 | | | |
| (2) ஷை ஆபீஸ் Stationery contingencies வகையிற் செலவு. | 6 | 13 | 3 | | | |
| (3) மெஷின்கள் ரிப்பேர் வகையிற் செலவு ... | 2 | 12 | ... | | | |
| மொத்தம் ரு. ... | 41 | 3 | 7 | ... | ... | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆக மொத்தம் செலவு ரூ ... | 1841 9 1 | 292 1 ... |
| | | | மாத முடிவில் மீதி இருப்பு ரூ ... | * 8407 3 3 | 13869 3 6 |
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 490 5 ... | 187 5 ... | ஆகமொத்தம் ரூ ... | 9748 12 4 | 14162 1 9 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ... | 9258 7 4 | 13974 12 9 | *By M. U. C. B. Pass Book Rs. 500- 0- 0 | | |
| | | | M. R. C. C. Bank Pass Book Rs. 7660-10- 2 | | |
| ஆகமொத்தம் ரூ ... | 9748 12 4 | 14162 1 9 | Cash on hand Rs. 246- 9- 1 | | |
| | | | 8407- 3- 3 | | |

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 8407-3-3 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; திருவாங்கூர் [illegible] பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகை ரூ. 10000; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 10000; (2) ரூ. 5000; காரைக்குடி [illegible] செட்டியார் அவர்களின் [illegible] கடையில் வட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1200: [illegible] ரொக்கம் ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, Auditor, 21—7—'34.

LAKSHMINARAYANAN,
Manager, 5—7—'34.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1934-ம் ஆண்டு ஜூலைமாத வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1934 ஜூலை | வரவு 1933 ஜூலை | விவரம் | செலவு 1934 ஜூலை | செலவு 1933 ஜூலை |
|---|---|---|---|---|---|
| I General Section : | | | I General Section : | | |
| (1) மாதச்சந்தாவகையில் வரவு... | 50 ... ... | | (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செலவாக்கியது ... | 117 ... ... | |
| (2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ... | 485 5 ... | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செலவாக்கியது ... | 127 ... ... | |
| (3) மதுரை M. R. C. C. பாங்கில் வட்டிக்குக் கொடுக்கப்பட்டு வாயிதா முடிவான Fixed Deposit தொகையைத் திரும்பவாங்கியது. ... | 1050 ... ... | | (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செலவாக்கியது. ... | 114 10 8 | |
| | | | (4) Stationery, contingencies வகையிற் செலவு ... | 10 ... ... | |
| | | | (5) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செலவாக்கியது. ... | 6 9 ... | |
| (4) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ... | 30 ... ... | | (6) சங்கக்கட்டிடவேலைகள் சம்பந்தமாகச் செலவு ... | 946 8 10 | |

57

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (5) Miscellaneous வரவு ... | 3 | 2 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 1618 | 7 | ... | 175 | 2 | 3 |
| **II Editorial Section :** | | | | | | |
| (1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்ருச் சந்தா வகையில் வரவு ... | 8 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 134 | 15 | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (7) தபால், தந்திவகையிற்செலவு | 17 | 12 | ... | | | |
| (8) சங்கக் கட்டிடத்துக்கும் காலியிடத்துக்கும் லாண்டு ரெவினியூ செல்லாக்கியது ... | 3 | 13 | 10 | ·92 | 1 | |
| | | | | 9 | 3 | 6 |
| (9) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு. | 12 | 6 | ... | | 1 | 9 |
| (10) சங்க வருஷோத்ஸவ சம்பந்தமாகச் செலவு ... | 36 | 4 | 6 | | | |
| (11) மதுரை M. R. C. C. பாங்கில் வட்டிக்குக் கொடுக்கப்பட்டு வாயிதா முடிவான Fixed deposit தொகையை மறுபடியும் ஷை பாங்கிலேயே வட்டிக்குக்கொடுத்தது... | 1050 | ... | ... | | | |
| மொத்தம் ரூ | 2442 | ... | 10 | 379 | 12 | 3 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 35 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டிஜன்ஸி வகையிற் செலவு. ... | 63 | 10 | 5 | | | |
| (3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு. | 93 | ... | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (3) செ. தமிழ்ப பழைய பிரதிகள் விற்றவகையில் வரவு ... | 1 | 12 | 9 | | | |
| மொத்தம் ரூ ... | 144 | 11 | 9 | 214 | 5 | ... |
| **III Press Section :** | | | | | | |
| (1) அச்சுக்கூலி வகையில் வரவு ... | 96 | ... | ... | | | |
| (2) பைண்டிங்கூலிவகையில் வரவு ... | 8 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 104 | ... | ... | ... | ... | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) தபால் [illegible] | [illegible] | | | | | |
| மொத்தம் ரூ ... | 201 | 10 | 5 | 40 | [illegible] | ... |
| **III Press Section :** | | | | | | |
| (1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 33 | ... | ... | | | |
| (2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 8 | 3 | ... | | | |
| (3) ப்ரெஷின் வகையரா ரிப்பேர் வகையிற் செலவு ... | 1 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 42 | 3 | ... | ... | | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 1867 | 2 | 9 | 389 | 7 | 3 | ஆக மொத்தம் செலவு ரூ. | 2685 | 14 | 3 | 419 | 12 | 9 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ... | 8407 | 3 | 3 | 13869 | 3 | 6 | மாதமுடிவில் மீதியிருப்பு ரூ. ... | * 7588 | 7 | 9 | 13838 | 14 | |
| ஆகமொத்தம் ரூ. ... | 10274 | 6 | ... | 14258 | 10 | 9 | ஆக மொத்தம் ரூ. ... | 10274 | 6 | ... | 14258 | 10 | 9 |

*By M. U. C. B.
Pass Bk. Rs. 61- 5- 9
M.R.C.C. Bank
Pass Bk. Rs. 7282- 1- 5
Cash on hand Rs. 245- 0- 7
7588- 7- 9

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 7588—7—9 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 25011—5—0. (2) ரூ. 1050—0—0; திருவாங்கூர் க்ரெடிட் சப்ளை பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகையும் ரூ. 10000. மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 10000. (2) ரூ. 5000. சமஸ்தானத்து மகா-ள-ள-ஸ்ரீ ள. ஸ. ராம. ராமநாதன்செட்டியார் அவர்களின் செக்கடி அய்யன் கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள தொகையும் ரூ. 1200. பணம் வசூலி அனுப்புவதற்காக வெளியே அனுப்பியுள்ள உண்டியலின் தொகை ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, Auditor, 13—8—'34.

LAKSHMINARAYANAN,

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. * | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13.* | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

### செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| *1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| 2. | கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | கரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 24. | குருமொழிவினவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 30. | ஞானமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| * 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 30 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

T. S. P. P. MADURA-34

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.